ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

ஏடு: பன்னிரண்டு

வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 17 செவ்வாய்க்கிழமை (01.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195







## ...ணைக்களத் தலைவர்களுடனான ...ன அனுமதிகள் இடைநிறுத்தம்

### ...திய நடைமுறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

...அலுவலர்கள் யாழ்.மாவட்டத்திலி... மாவட்டங்களுக்குச் செல்வதற்கு, ...ன் திணைக்களத் தலைவர்கள் ...யண அனுமதி பெற்று பயணம் ...டைமுறை நேற்றிலிருந்து தற்காலி... நிறுத்தப்பட்டுள்ளது.

...படைத் தலைமையகத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமையவே அப் பயண அனுமதி தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இனிவரும் நாள்களில் அவசர தேவைக ளின் நிமிர்த்தம் வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய வேண்டிய அரச அலுவலர் கள் தங்களது (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வேலையற்ற பட்டதாரிகள் கல்வி வலயம் முன் போராட்டம்

### நேர்முகத் தேர்வு ஒத்திவைப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள வேலையற்ற பட்ட தாரிகளில் சுமார் 300 பேர் யாழ்.கல்வி வல யத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னைய ஆண்டுகளினைப் போன்று பரீட்சைகள் நடத்தாமல் அனைத்துப் பரீட்சார்த் திகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

இவர்களின் மறியல் போராட்டம் காரண மாகக் கல்வி வலயம் நேற்று இயங்கவில் லை. இதனால் சுமார் 300 பட்டதாரிகளுக்கு நேற்று நடைபெறவிருந்த ஆசிரிய நியமனத் துக்கான நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக் கப்பட்டன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# ...லிகளின் மரபு வழிப் போர்த் திறனை ...ராணுவம் முற்றாக அழித்து விட்டது



## இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் இனிமேல் மரபு வழி இராணு வமாக சண்டையிட முடியாது. எமது இராணுவத்தினர் நடத்தும் தொடர்ச்சியான தாக்குதல்களால் தமது இராணுவ பலத்தை அவர்கள் இழந்துவிட்டார்கள். அவர்களை இராணுவ ரீதியில் முற்றாகத் தோற்கடிப்பதற்கு இன்னும் ஒரு வருடம் எடுக்கும் என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித் துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் நேற்று விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செட்டிகுளம் காட்டுப் பிரதே சத்தில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆயுதப் பராமரிப்பு நிலையம் மற்றும் பயிற்சி முகாம் மீது நேற்றுப் பிற்பகல் விமானத் தாக் குதல் நடத்தப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச் சுத் தெரிவித்துள்ளது.

செட்டிகுளத்திற்குத் தென்மேற்குப் பகுதி யில் மூன்று கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த நிலைகள் மீது நேற்றுப் பிற்பகல் 2.45 (12 ஆம் பக்கம் பார்க்க)

## ...ரிக்கத் தூதரகம் ...முதல் இயங்கும்

(கொழும்பு)

...க்கத் தூதரகம் இன்றுமுதல் ...மையான நடவடிக்கைகளை மீண் ...க்கவுள்ளதாக அறிவித்துள்ளது. ...தில் ஒரு வகையான மர்மப் பவு ...டிக்கப்பட்டதையடுத்து கடந்த 25 ...பாதுகாப்புக் காரணங்களுக்காகத் ...சயற்பாடுகள் உடனடியாக நிறுத்...

...டர்பில் மேற்கொள்ளப்பட்ட விசா... ...ல் சந்தேகத்திற்குரிய பவுடர் ஆபத்... ...ல்ல என்பது உறுதி செய்யப்பட்...

...மூடப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாண முதலாவது ஆளுநராக விக்டர் பெரேரா ஜனாதிபதியால் நியமிப்பு

### நாளை பதவியேற்கின்றார்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தின் ஆளுநராக ஓய்வு பெற்ற பொலிஸ் மாஅதிபர் விக்டர் பெரேரா நாளை பதவி ஏற்கவுள்ளார்.

இவரது நியமனம் ஜனாதிபதியால் வழங் கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் ரஞ் சித் குணசேகர தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உயர் நீதிமன்றத்தால் பிரிக்கப்பட்ட பின்னர் வடக் குக்கு நியமிக்கப்படும் முதலாவது ஆளுநர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநரை நியமிப்பது தொடர்பில் நீண்டகாலமாக இழு பறி நிலை காணப்பட்டு வந்தது. சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா (12 ஆம் பக்கம் பார்க்க)



## ...னியாவில் நேற்று திடீர் தேடுதல் ...சைக்கிளுடன் தமிழர்கள் கைது

(வவுனியா)

...யா நகரின் ஹொரவப்பொத்தா ...ள்வட்ட வீதி, குருமண்காட்டுச் சந்தி ...பல இடங்களில் நேற்று மாலை ...ர் திடீரென நடத்திய தேடுதல் நட ...யின் போது பலர் கைது செய்யப் ...பொலிஸ் நிலையத்திற்கு வாகனங்க ...க் கொண்டு செல்லப்பட்டதாகக் ...யப்பட்டவர்களின் உறவினர்கள் ...ள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிள்களும் வவுனியாப் பொலிஸ் நிலை யத்திற்குப் பொலிஸாரால் ஏற்றிச் செல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோட்டார் சைக்கிள்களும் பொலி ஸாரின் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட தாகவும் கூறப்படுகின்றது. இந்தக் கைதுகள் தொடர்பாக உறவினர்கள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், செல்வம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹிக்கடுவவில் ரயில் தடம்புரண்டதில் ஐந்து பேர் உயிரிழப்பு; 20 பேர் படுகாயம்

(கொழும்பு)

அநுராதபுரத்திலிருந்து மாத்தறை நோக் கிச் சென்று கொண்டிருந்த ரயில் ஹிக்கடுவ பாலத்தில் நேற்றுப் பகல் 12.30 மணியள வில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலியாகினர். 20 பேர் காயமடைந்துள் ளனர்.

தண்டவாளத்தில் ஏற்பட்டிருந்த கோளாறு காரணமாகவே ரயில் தடம்புரண்டதாகத் தெரி விக்கப்படுகின்றது. ஹிக்கடுவப் பாலத்திற்கு மேலாகச் சென்று கொண்டிருந்தபோது ரயில் தடம் புரண்டதாகவும் இதனால் ரயிலிலிருந்த பலர் ஆற்றுக்குள் வீசப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இவர்களில் ஐவர் நீண்ட நேரமாக நடத் தப்பட்ட தேடுதலின் பின்னர் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டனர். ரயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதாலேயே சம்பவ இடத்தில் மூவர் கொல்லப்பட்டனர். 20 பேர் படுகாயமடைந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

...வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 47-வது ஆண்டில் மக்கள் வங்கி




1961ம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதியன்று மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. 1961ம் ஆண்டின் 29வது இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரகாரம் வங்கி நிறுவப்பட்டது.

2008-ம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி வங்கி தனது சேவையின் 47வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. அதனை ஒட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது.

இன்று நாடு முழுவதிலும் 324 கிளைகளையும் 300 சேவை நிலையங்களையும் மக்கள் வங்கி கொண்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிக கிளைகளைக் கொண்ட வங்கி என்கின்ற பெருமையும் மக்கள் வங்கிக்கு உண்டு!

யாழ்ப்பாணத்தில் 13 கிளைகளையும் 6 சேவை நிலையங்களையும் இவ் வங்கி கொண்டுள்ளது.

கூட்டுறவுத் துறையினை அபிவிருத்தி செய்து பலப்படுத்தி அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதை மக்கள் வங்கி தனது பிரதான செயற்பாடாக கருதி வருகின்றது. நாட்டின் கிராமப் புறங்களுக்கு வங்கிச் சேவையை அறிமுகப் படுத்திய பெருமை மக்கள் வங்கிக்கே உரியது. சாதாரண மக்களினதும் விவசாய, மீன்பிடி மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்களின் வங்கியாகவும் இது திகழ்கிறது.




**மக்கள் வங்கி இன்று 47-வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

கிராமிய பொருளாதார அபிவிருத்தி என்னும் அத்திபாரத்தின் மூலமாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பும் பணி மக்கள் வங்கியிடம் விடப்படுகிறது.

யாழ் நகரில் ஸ்ரான்லி வீதியிலும் யாழ்.பல்கலைகழக வளவினிலும் பருத்தித்துறையிலும் 24 மணிநேரமும் உங்கள் கணக்கில் இருந்து பணம் பெற வசதியாக கண்விழித்துக் காத்திருக்கும் **ATM** இயந்திர வசதி இப்போது யாழ.குடாநாட்டில் கிடைக்கிறது. விரைவில் சுண்ணாகம் சாவகச்சேரி கிளைகளிலும் இவ்வாறான தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திர சேவை மக்களுக்கு கிடைக்க உள்ளது. மகக்கள் வங்கியின் அனேக கிளைகள் நாட்டின் 300ற்கு மேற்பட்ட கிளைகளுடன் கணனி வலைப் பின்னலில் இணைப்பைப் பெற்றுள்ளன.. அனைத்துக் கிளைகளுக்கும் இவ் வசதி விரைவில் கிட்டும்.

ஆள் அடையாள அட்டையுடன் வங்கிக்கு வருகை தந்து, ரூபாய் 500 உடன் சாதாரண சேமிப்புக் கணக்கு ஒன்றினை திறக்கும் வாடிக்கையாளர் ஒருவர் தான் செல்லும் இடமெல்லாம் அக் கணக்கினை செயற்படுத்த முடியும். எனவே பயணத்தின்போது பணமாக எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இனி இல்லை. மக்கள் வங்கியின் ஏதாவது ஒரு கிளையில் உள்ள உங்கள் கணக்கில் நாடெங்கிலும் உள்ள கிளைகளிலிருந்து பணத்தை போடவும் எடுக்கவும் அனுப்பவும் கட்டணங்கள் ஏதும் கிடையாது.

உங்கள் கணக்கில் உள்ள பணத்தை இயந்திரத்தில் பெறுவது மிகவும் சுலபமானது. கணக்கை திறந்த அன்றே **PET** இயந்திர அட்டைக்கு இலவசமாக விண்ணப்பிக்கலாம். கொழும்பில் இருந்து அட்டை கிடைக்கப் பெற்றதும் அதிலிருந்து பணத்தை பாதுகாப்பாக பெறும் வழிமுறைகள் பரீட்சயமில்லாத வாடிக்கையாளர்களுக்கு பயிற்றுவிக்கப் படும். வங்கி மூடப்பட்ட பின்பும், விடுமுறை நாட்களிலும், சந்தைக்கும் பயணத்திற்கும் வரும் போதும் தேவைக்கு அளவாக அவ்வப்போது பணத்தை பெற இயந்திரத்தை பயன் படுத்தலாம்.

மக்கள் வங்கியில் கருமம் ஆற்ற வரும் உங்களுக்கு அன்பான கனிவான வரவேற்புக் கிடைக்கிறது. தயக்கம் ஏதும் இன்றி வங்கிப் பணியாளர்களுடன் அல்லது முகாமையாளருடன் உங்கள் தேவைகள் பற்றி எவரும் கலந்துரையாடலாம். வங்கிச் சேவைகள் காலை 7.30 மணிக்கே ஆரம்பமாகின்றன. எனவே கடமைக்கு செல்ல முன்னரும் பாதை வீதித்தடை நேரத்திற்கு முன்பும் உங்கள் வங்கித் தேவைகளை நிறைவு செய்து விட்டு சௌகரியமாகத் திரும்பி விடலாம்.




வங்கியின் வாடிக்கையாளர்களுக்கான கருமங்களை ஆற்றும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை ஆகும். எனவே நெருக்கடி நேரங்களை தவிர்த்து வாடிக்கையாளர்கள் தமக்கு வசதியான நேரத்தில் வங்கிக்கு வந்து தமது அலுவல்களை மேற்கொள்ளலாம்.

சுனாமி போன்ற இடர் காலங்களில் உங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள அரசாங்கம் மக்கள் வங்கியையே தெரிவு செய்து இருந்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். நாடு முழுவதிலும் இச் சேவையினை செய்த பெருமை மக்கள் வங்கிக்கு உண்டு.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சுனாமிக் கணக்குகளும் சாதாரண சேமிப்புக் கணக்குகளைப் போலவே வட்டி மற்றும் சகல சலுகைகளையும் கொண்டுள்ளன. இவை நாடுமுழுவதும் செல்லுமிடமெல்லாம் பயன் படுத்தப்படலாம்.

*(தொடரும்)*


மக்கள் வங்கியின்

ஜய ஶ்ரீ
Jaya Sri

மாபெரும் பரிசுப்போட்டி 2008




மாதாந்தச் சீட்டிழுப்பின் மூலம்
சகல கிளைகளுக்கும் பரிசுகள்
• ஏப்ரல் - ஜுன் DVD பிளேயர்கள்
• ஜுலை - செப்டம்பர் தையல் இயந்திரங்கள்
• ஒக்டோபர் - டிசம்பர் கையடக்கத் தொலைபேசிகள்

## சேமிக்கும் அனைவருக்கும் வெற்றி மேல் வெற்றி

*மாதாந்த பரிசுகளை வெல்ல நீங்கள் செய்ய வேண்டியது மக்கள் வங்கியின் வேண்டியதொரு சேமிப்புக் கணக்கில் ரூ. 25,000/- அல்லது நடைமுறை கணக்கில் ரூ. 25,000/- த்தினை குறைந்தபட்ச மீதியாக பேணி வருவது மட்டுமே.

வருட இறுதியில் பரிசினை வெல்ல நீங்கள் செய்ய வேண்டியது, 2008 அக்டோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய 03 மாதங்களில் மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கில் ரூ. 25,000/- அல்லது நடைமுறை கணக்கில் ரூ. 25,000/- த்தினை குறைந்தபட்ச மீதியாக பேணி வருவது மட்டுமே. இதுவரை மக்கள் வங்கியில் கணக்கொன்று இல்லாதவர்கள் அருகிலுள்ள மக்கள் வங்கி கிளையில் விரும்பிய சேமிப்புக் கணக்கொன்றை அல்லது நடைமுறை கணக்கை ஆரம்பித்து போட்டிக்கு தேவையான குறைந்தபட்ச மீதியை கணக்கில் வைப்பு செய்வதன் மூலம் இம்மாபெரும் பரிசுப் போட்டியில் பங்கு பற்றும் அதிர்ஷ்டத்தினை பெறலாம். அதற்காக உங்கள் விருப்பத்திற்கிணங்க இசுறு உதான, சிசு உதான, YES FutureStars, YES, வனிதா வாசனா, அறுவடை, ஜனஜய, பரிணத அல்லது சாதாரண சேமிப்பு கணக்கு போன்ற ஏதாவதொரு சேமிப்பு கணக்கை அல்லது நடைமுறை கணக்கை உங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பிக்கலாம்.


2008 ஏப்ரல் 01 தொடக்கம் டிசெம்பர் 31 வரை குறிப்பிட்ட வைப்புத் தொகையினைப் பேணி வருவதன் மூலம் நீங்கள் மாதாந்த மற்றும் வருட இறுதி சீட்டிழுப்பிற்கு தகுதி பெறலாம். சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கில் அதிகரிக்கும் ஒவ்வொரு ரூ. 25,000/- க்கும் மேலதிக வெற்றி வாய்ப்புக்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது.

**விரையுங்கள்! மக்கள் வங்கியுடன் அதிகம் சேமித்து "ஜய ஶ்ரீ" சீட்டிழுப்பினுள் இன்றே நுழையுங்கள். மேலதிக விபரங்களுக்கு, உங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையினை நாடுங்கள்.**




வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில்
பணப்பரிசாக ஒரு கோடி ரூபா




மாதாந்தச் சீட்டிழுப்பில்
• கணனி 5 • டிஜிடல் கமராக்கள் 5
• குளிர்சாதனப் பெட்டிகள் 5 • தொலைக்காட்சிப் பெட்டிகள் 5
வீதம் ஒவ்வொரு மாதமும் 20 பரிசுகள்




மாதந்தோறும் மாருதி Zen மோட்டார் கார்கள்
வருடாந்தம் மொத்தம் 9 வாகனங்கள்

(C-1266)

FutureStars YES வனிதா வாசனா அறுவடை ஜனஜய பரிணத

www.peoplesbank.lk

மக்கள் வங்கி

# இன்று ஒரு தகவல்

## விடியல் நேரம்

புதுவருஷம் பிறந்திருக்கு ...! அதனால் வாழ்த்து சொல்லிவிட்டு போகலாம் என்று வந்தேன் என்றார் ஒருவர்.

"ரொம்ப சந்தோசம்! "என்றேன்.

" போன வருஷ கஷ்டமெல்லாம் போன வருஷத்துடன் போகட்டும்! இந்த வருஷம் நமக்கு நல்ல சௌகரியங்களையும் கொடுக்கட்டும்!" என்றார்.

ஒவ்வொரு வருடமும் நாம் இப்படியேதான் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு நாளும் புதிதாகத்தான் விடிந்து கொண்டிருக்கிறது வரும் போது வெளிச்சம்! போகும் போது இருட்டு !

"உண்மையான விடியல் என்பது என்ன?" என்று தனது சீடர்களைப் பார்த்துக்கேட்டாராம் ஒரு துறவி.

"விடியல் நேரம் என்று சொல்கிறோமே ... அது எந்த நேரம் என்று உங்களால் துல்லியமாக சொல்ல முடியுமா?" என்றார்.

ஒரு சீடர் எழும்பி,

"தொலைவில் வரக்கூடிய ஒரு மிருகம் ஆடா அல்லது மாடா என்று இனம்கண்டு கொள்கிற நேரம் தான் விடியல் நேரம் ! "என்றார்.

" இது சரியான பதில் இல்லை ! "விடியல் நேரம் இது இல்லை என்று சொன்னார் துறவி.

இன்னொரு சீடர் எழும்பி" நான் பதில் சொல்கிறேன் ஒரு மரம்.... இருக்கிறது.... அதுஆலமரமா? அல்லது அரச மரமா? என்று அடையாளம் காணக்கூடிய நேரம் தான் விடியல் நேரம்!" என்றார்.

"அதுவும் சரியான பதில் இல்லை" என்று சொல்லி விட்டார் துறவி.

இதற்கு மேல் விளக்கம் கொடுக்க முடியாத சீடர்கள் "சுவாமி ! நீங்களே சரியான பதிலை சொல்லி விடுங்கள் ...உண்மையில் 'விடியல் நேரம்' என்பது எது ?" என்று கேட்டார்கள்.

இப்பொழுது துறவி பதில் சொன்னார்.

நமது உதவியை நாட வரும் ஒரு ஆண் நமது சகோதரன் ஆகவும் அது மாதிரியே வரக்கூடிய நேரம் எதுவோ அது தான்'விடியல் நேரம்' என்று விளக்கம் கொடுத்தார் துறவி.

இவர் சொல்லும் அடிப்படையில் யோசித்துப் பார்த்தால்இன்னமும் நமக்கு விடிவு காலம் –விடியல் நேரம் வந்ததாக தெரியவில்லை!.

அடுத்தவர்களை சகோதரியாகவும் –சகோதரனாகவும் நினைக்கும் சகோதரர்களையா இந்தக் காலத்தில் பார்க்க முடிகிறது? அடித்து விரட்டுவதும் ... நீ வேறு நான்வேறு என்ற நினைப்பும் தான் இப்பொழுது அதிகமாகி விட்டது!

ஒருவர் இன்னொருவரைப் பார்த்து

"நான் புத்தாண்டு வாழ்த்து - Greetings அனுப்னேனே... உங்களுக்கு கிடைத்ததா?" என்று கேட்டார்.

"ஓ! கிடைத்ததே...நானும் நன்றி கார்ட் அனுப்பினேனே..." என்றார் மற்றவர்.

உடனே இவர்

" ஏன் சார் பொய்சொல்றீங்க? நான் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்து அனுப்பவே இல்லையே ... சும்மா சொல்லிப்பார்த்தேன் ...உடனே கிடைத்தது என்று சொல்றீங்களே..."என்றார்.

அதற்கு "ஏன் சார் .." Greetings அனுப்பியதாக நீங்கள் பொய் சொல்லும் போது அது கிடைத்ததாக நான் பொய் சொல்லக்கூடாதா?" என்றார் மற்றவர். இவர்களுக்கெல்லாம்விடிவு காலம்வருவதுஎப்போது?

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# கதிர்காம உற்சவத்தினை முன்னிட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கதிர்காமத்தின்வருடாந்த உற்சவத்தினைமுன்னிட்டுபாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. 2200க்கும் அதிகமான படையினரும் பொலிஸாரும் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்என்று தென்மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெகத்அபேகுணவர்தனா தெரிவித்தார்.

இது குறித்து பிரதி பொலிஸ்மா அதிபர் தொடர்ந்தும் கூறியதாவது , இவ்வாரம் ஆரம்பமாகவுள்ள கதிர்காமம் உற்சவத்தை முன்னிட்டு இலட்சக்கணக்கான மக்கள் அங்கு வருகைதரவுள்ளனர். அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கானநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளன. அதற்காக கதிர்காமம் பொலிஸார் மற்றும் தென்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலக அதிகாரிகள் உள்ளிட்டோர் இணைந்து புதிய பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

பொலிஸாருக்கு உதவும் வகையில் யால இராணுவ முகாம்களில் கடமையாற்றிவரும் இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 2200 இற்கும் அதிகமான பொலிஸாரும் இராணுவத்தினரும் வெளிமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்படவுள்ளனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக விஷேட சோதனைச் சாவடிகள் அப்பகுதியில் அமைக்கப்படவுள்ளதுடன் சிவில் உடையுடன் கூடிய பாதுகாப்பு அதிகாரிகளும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (அ)

# முரண்பட்டுள்ள உறுப்பினர்களுடன் பேச்சு நடத்த ரணில் இணக்கம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கட்சிக்குள் முரண்பட்டுள்ள குழுவினருடன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிக்கட்சி தலைவரு மான ரணில் விக்ரமசிங்க விரை வில் பேச்சுவார்த்தை நடத்த விருப் பதாக நம்பகரமான வட்டார ங்களிலிருந்து தெரியவருகின்றது.

சப்ரகமுவ, வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு முன்னர் இந்த சந்திப்பு இடம் பெறும்.

கட்சியின் தலைமை பதவியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, லக்ஷ்மன் செனவிரத்ன உள்ளிட்ட குழுவினருடனேயே ரணில் விக்ரமசிங்க பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

தேசிய ஊழியர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் சிறிலால் டி மெல்லிற்கும் ரணில் விக்ரம சிங்கவிற்கும் இடையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் காரியாலயமான கேம்பிரிஜ் டெரஸில் இடம் பெற்ற சந்திப்பு ஒன்றின் போதே ரணில் விக்ரமசிங்க இவ்வாறான இணக்கத்தை தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அத்துடன் கட்சியின் மறுசீரமைப்பு யோசனைகள் குறத்து ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ உள்ளிட்ட குழுவினர் ரணிலுடன் நேரடியாக சந்திப்பொன்றை ஏற்படுத்தி கொடுக்குமாறு தன்னிடம் கேட்டுக் கொண்டதாகவும் சிறிலால் டி மெல் தெரிவித்துள்ளார்.

இதற்கமையவே கட்சிக்குள் முரண்பட்டுள்ள குழவின ருடன் தான் எந்நேரத்திலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது. (அ)

# இராசிபலன்

01.07.2008
(ஆனி 17,செவ்வாய்க்கிழமை)
திரயோதசி பிற்பகல் 1.51மணிவரை
ரோகிணி பிற்பகல் 4.34மணிவரை
இராகுகாலம் 2.56 -4.26மணிவரை
சுபநேரம் 10.26 -11.56 மணிவரை,
காட்டுத்துறை அம்பலவாண்
விக்னேஸ்வரர் தீர்த்தம் .

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம் , கல்வியில்ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்தகாரியம் தாமதமாகும். |
| இடபம் | நற்கீர்த்தி , மனோதைரியம் , காரிய நன்மை , கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிகசெலவு, ரோகநிலை, திடீர் நன்மை. |
| கடகம | மாதர் நட்பு , வெகுமானம், நல்ல முயற்சி,தெய்வசிந்தை . |
| சிங்கம் | உஷ்ணநிலை , பிறருக்கு உதவுதல் காரியதாமதம் , சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு , சயனசுகம், தனதானிய சேர்க்கை. |
| துலாம் | ஆரோக்கியம்,பெரியோரால் மதிக்கப் படுதல், காரியசித்தி , நன்கொடை . |
| விருச்சிகம் | நிலைமாற்றம் , புத்திரரால் கவலை, பிரயாணம் ,பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம் ,போசன சுகம். |
| மகரம் | நல்லமுயற்சி, தனலாபம், உறவினர்சந்திப்பு , பிறருக்கு உதவுதல் . |
| கும்பம் | காரியஅனுகூலம், கீர்த்தி , போசனசுகம், உற்சாகம்.. |
| மீனம் | தாழ்வு நிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |

வளவன்

# புதிய பொலிஸ்மா அதிபராக விக்கிரமரட்ன இன்று பதவியேற்பு

(கொழும்பு)

நாட்டின் 31ஆவது புதிய பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ன இன்று காலை உத்தியோக பூர்வமாக தமது கடமைகளை ஏற்கவுள்ளார். இதனை முன்னிட்டு பொலிஸ் தலைமையகத்தில் விஷேட வைபவமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் விக்டர்பெரேரா ஓய்வு பெற்றதையடுத்தே ஜயந்த விக்கிரமரட்ன பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்படவுள்ளார்.

நாட்டின் 30 ஆவது பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த விக்டர் பெரேரா நேற்றுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

புதிய பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படவுள்ள ஜயந்த விக்கிரமரட்ன நாட்டின் முதலாவது பொலிஸ் ஊடக பேச்சாளராக கடமையாற்றியவராவார்.

கம்பஹா மாவட்டத்தின் பெம்முல்ல பகுதியை பிறப்பிடமாகக் கொண்ட அவர் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் பழைய மாணவராவார்.

1974 ஆம்ஆண்டு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட ஜயந்த விக்கிரமரட்ன 2004 ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மாஅதிபராக பதவியுயர்வு பெற்றார்.

இதன்பின்னர் 2007 ஆம் ஆண்டு பொலிஸ் ஊடகபேச்சாளராகதெரிவு செய்யப்பட்ட அவர் சுமார் ஒரு வருட காலம்வரை பதவி வகித்தார். (அ)



சங்கத்தானை நாமகள் முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ. இரகுநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் சிறப்பு விருந்தினரான சாவகச்சேரி மக்கள்வங்கி கிளை முகாமையாளர் க. சண்முகலிங்கம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(சாவகச்சேரி நிருபர்)

## வரலாற்று பாட மதிப்பீடு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கான தரம் 11 வரலாற்றுப் பாடத்திற்கான மதிப்பீடு- 3 எதிர்வரும் 11ஆம் திகதி நடாத்தபடவுள்ளது ஏற்கனவே இம் மதிப்பீடு இம் மாதம் 18ஆம் திகதியே நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சி வலய இரண்டாம் தவணைப் பரீட்சை இம் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பிப்பதால் இம் மதிப்பீடு- 3இனை 11ஆம் திகதி நடத்துமாறு வலயக் கல்வி பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

மேலும் இப் பரீட்சைக்கான வினாத் தாள்களை 10 ஆம் திகதி வியாழக்கிழமை உரிய கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ-19)

# புதிய தலைவராக; செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஏகமனதாகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக சபையின் தலைவராக செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் மறைவினால் ஏற்பட்ட தலைவர் பதவிக்கான வெற்றிடத்துக்கு ஒரு வரை நியமனம் செய்வதற்காக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேவஸ் தான நிர்வாக சபையில் விசேட கூட்டத்தில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை காலமும் தேவஸ்தான நிர்வாக சபையின் இணைச் செயலாளராகப் பதவி வகித்து வந்துள்ளார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிவரும் ஆறு திருமுருகன் , யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளை , சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லம் ஆகியவற்றினதும் தலைவராகவும் பல சமய சமூக தொண்டு நிறுவனங்களுடனும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இலவச பாட நூல்கள் அனைத்தும் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு இதுவரை வந்து சேராத அனைத்துப் பாடநூல்களும் கல்வி அமைச்சினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவற்றை யாழ். அரசாங்க அதிபர் பொறுப்பேற்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினத்திடம் ஒப்படைத்துள்ளார்.


புத்தகங்கள் யாவும் யாழ்.இந்துக் கல்லூரியில் வைக்கப்பட்டுள்ளன. சகல கல்விக் கோட்டங்களும் தமக்குத் தேவையான நூல்களை உடனடியாக எடுத்து மாணவர்களுக்கு விநியோகிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-19)

## மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம்

யாழ். சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத்தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (அ)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புப் பணியில் சர்வதேச லயன்ஸ் கழகம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகம் இவ்வாண்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 80 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் ரூபா 26 இலட்சம் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது..

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கு 249 வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் மேலும் 193 வீடுகளுக்கான நிதியத்தைப் பெற விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் ரி. சற்குணராசாவின் இல்லத்தில் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் லயன்ஸ் கழக பிரதி மாவட்டச் செயலாளர் வை. தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் லயன்ஸ் கழக பிரதிநிதிகள் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தரமான வீடுகள் ஆரம்பத்தில் உலக வங்கியின் உதவியுடன் ஒரு வீட்டிற்கு தலா 2 1/2 இலட்சம் நிதியில் அமைக்கத் தொடங்கினார்கள்.

எனினும் பொருட்களின் விலையேற்றம் காரணமாக கட்டுமானப் பணியை தொடர முடியாமல் அத்திவார மட்டத்தோடு நிறுத்தப் பட்டிருந்தது.

யாழ் . மாவட்ட லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் இவற்றை அவதானித்து எடுத்த முயற்சி யாழ். அரச அதிபரின் அனுமதியோடு சர்வதேச லயன்ஸ் கழகம் 22 கோடி ரூபாவை இவ்வீடுகளின் கட்டுமானப் பணிக்காக ஒதுக்கியுள்ளது.

இதனால் தெரிவு செய்யப்பட்ட 442 வீடுகளில் 249 இன் கட்டுமானப் பணிகள் விரைவாக நடைபெறுகின்றன. ஒதுக்கப்பட்ட 22 கோடி ரூபாவில் 4. 6 கோடி ரூபா முதற் கட்டமாக வழங்கியுள்ளது. தற்பொழுது ஒரு வீட்டிற்கு உலக வங்கியின் 2 1/2 இலட்சத்துடன் லயன்ஸ் கழகத்தின் 5 இலட்சம் நிதியும் சேர்த்து 7 1/2இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் வீட்டு நிர்மாணப்பணிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. ஒரு வீடு குறைந்த பட்சம் 505 சதுர அடிக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும் . எனவும் கிணறு ,மின்சாரம், மலசலகூட வசதி என்பவற்றோடு வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

அத்துடன் கொடை வள்ளல்களிடமிருந்து மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநரினால் சேகரிக்கப்பட்டதும் வடமராட்சி, கோப்பாய், மானிப்பாய் லயன்ஸ் கழகங்களின் உதவியுடன் ரூபா 56 இலட்சம் செலவில் 7 வீடுகள் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்றும் வடமாகாண லயன்ஸ் கழக புற்றுநோய் நிதிய்த்திலிருந்து கிடைக்கும் வட்டிப்பணத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கும் புற்றுநோய்- எயிட்ஸ் தடுப்புச் சங்கத்தின் ஊடாக மருந்துப் பொருட்கள் வாங்க மாதாந்தம் 500ரூபா வீதம் வழங்கப்படுவதுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள புற்று நோயாளிகளுக்கு சத்துணவுகளும் படுக்கை விரிப்புகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தனர். (ஓ)

## வணிகர் கழகத்தால் புற்றுநோய் சிகிச்சை பிரிவுக்கு வர்ணப்பூச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் யா/போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் கட்டடத் தொகுதி மற்றும் தளபாடங்களிற்கு வர்ணம்பூசி கொடுக்கப்பட்டுள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க யாழ்.வணிகர் கழகம் இப்பணியை செய்து கொடுத்ததாக வணிகர் கழக செயலாளர் தெரிவித்தார். (அ-4)

## பொருட்கள் விநியோகம்

(சித்தன்கேணி)

ஐ. நா. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் உணவுப் பண்டமில்லாத பொதிகள் விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் எல்லைக்கு உள்ளே நண்பர்கள் , உறவினர்கள் வீடுகளில் வசிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த J/143 இலிருந்து 156 வரையான கிராமசேவையாளர் பிரிவுகளில் பதிவுக்கு உட்பட்டவர்களுக்கு இப் பொருட்கள் விநியோகம் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

## கற்பகதரு காட்சியும் மிருதங்க உபசார சமர்ப்பணமும்

சித்தங்கேணி -தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவாகமசுந்தரி சமேத ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் இரண்டாம் நாளான இன்று கற்பகதருகாட்சியும் மிருதங்க உபசார சமர்ப்பணமும் இடம்பெறும். (ஓ-17)



## யாழ்.செய்திகள்


## விசேட பொதுக் கூட்டம்

வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் ஆவரங்கால் சிவன் கோவிலுக்கருகாமையிலுள்ள சிவசக்தி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் மூத்ததம்பி விநாயகமூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலி வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,வலி.கிழக்கு கோப்பாய். பிரதேச செயலர், ஈழமக்கள் ஜனநாயக் கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் உதயன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் கிழக்குப் பகுதியில் வதியும் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் , உதவித் திட்டங்கள் பற்றி ஆராயப்பட உள்ளதால் குடும்பத் தலைவர்கள் தங்கள் பங்கீட்டு அட்டையைக் கொண்டு வருமாறும் இடம் பெயர்ந்தோர் நிவாரணச் சங்கத் தலைவர் மூ.விநாயகமூர்த்தி சிவாச்சாரியார் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)






கொடிகாமம் தவசிகுளம் கண்ணகை அம்மன் அறநெறிப் பாடசாலை ஓராண்டு விழாவில் சாவகச்சேரி பிரததேச சபை செயலாளர், அறநெறிப் பாடசாலை அதிபர் ச.ஜெகராசா, திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர் க.கந்தையா ஆகியோர் உரையாற்றுவதைப் படங்களில் காணலாம்.

# நோத் முதல் கோபல்லவா வரை 23



## ஆங்கிலேயரும் கண்டியரசனும்

சௌரதனுக்குப் பின்னர் டொன் கொன்ஸ்ரன்ரைன் டிசா கண்டி மீது படைஎடுத்து வெள்ளவாயாவில் 1630 இல் படுதோல்வி அடைந்தமை கண்டி மக்களின் வீரத்தைக் காட்டுகிறது. இரண்டாவது இராசசிங்கன் காலத்தில் கண்டியைத் தீயிட்டு எரித்த டயகோடி மெல்லோ முதலானவர்களைப் பேராதனையில் அடித்து நொறுக்கி வீழ்த் திய வீரமும் கண்டியருக்கு இருந்தது. ஒல்லாந்தர் இலங்கைக் கரை நாடுகளைப் பிடித்தபோது இராசசிங்கன் கரை நாடுகளிலேயே இருந்தான்.

விமலதர்மசூரியனுடைய வாழ்க்கையே ஒரு வீர வரலாறாகும். அவனுடைய இளமைப் பெயர் கோணப்பு பண்டாரன். அவன் டொன் யுவான் என்னும் கிறிஸ்தவ மதப் பெயரைத் தாங்கிப் போர்த்துக்கேயரின் போர் முறைகளையும் தந்திரோபாயங்களையும் அந்தரங்கங்களையும் ஒரு காலத்தில் அறிந்தவன். அவன் கண்டியைப் போரிட்டுக் கைப்பற்றியவன். அல்லாமலும் தன் ஆளுரிமையைப் பலப்படுத்தவே பழைய கண்டி மன்னான கரளியட்ட பண்டாரனின் மகளாகிய டொனா கதறீனாவை முறைப்படி மணந்து இராணியாக்கியவன். அன்றி கண்டிமீது படை எடுத்த இராசசிங்கனை முற்றாக முறியடித்துப் பெரு வெற்றிவாகை சூடியவன். கண்டிப் பொது மக்களினதும் சங்கத்தாரதும் ஆதரவைப் பெறவே அவன் புத்தசமயத்தை மேற்கொண்டு விமலதர்ம சூரியன் எனப் பெயரும் பூண்டான். தனக்கு மாறகாக இருந்த போர்த்துக்கேயரை கன்னொறுவா என்னுமிடத்தில் முறியடித்து வெற்றிபெற்றான். இப் போரிலேயே போர்துக்கேய தளபதி டீசூசா உயிர் துறந்தான்.

### மீள் பார்வை

விமலதர்மனை அடக்கவே போர்த்துக்கேயப் பெருவீரனாகிய அசிவிடோ ஆள்பதியாக இலங்கைக்கு வந்தான். அவனையும் விமலதர்மன் ஒல்லாந்தருடைய நட்பைப் பெற்று வெற்றிபெற்றான் என்பது சரித்திரம். தர்மபாலன் (1551-1597) தனது கரைநாடுகளைப் போர்த்துக்கேய மன்னனுக்குத் தத்தஞ் செய்து கொடுத்த கொடையை மல்வான மகாநாடு முறையேற்புச் செய்தமையால் இலங் கைச் சரித்திரத்திலே ஒரு புதிய திருப்பம் ஏற்பட லாயிற்று. அன்று தொடக்கம் கண்டி மன்ன னையே சிங்களவர் பெரிதும் அபிமானிக்கத் தொடங்கினார்கள். கந்தஉடறட் இராச்சியம் பிரபலிக்கமுறுவதாயிற்று.

இவ்வாறாகப் பகைமையுள்ள கோட்டை சீத்தவாக்கை அரசுகள் இரண்டும் பதினேழாம் நூற்றாண்டில் மறைந்தபின் கண்டி அரசு ஒன்றே சிங்கள அரசின் இராசதானியாக விளங்கிற்று. இலங்கைக் கரைநாடுகளில் அதிகாரம் பெற்ற போர்த்துக்கேயர் கிறிஸ்தவ சமயத்தை அங்கே பரப்புவதில் முனைந்தார்கள். எனவே கரைநாட்டுச் சிங்களவரில் பலர் தங்கள் சாதி சமயம் அழியாமல் இருப்பதற்காகக் கண்டி நாடுகளில் குடியேறுவாராயினர். அவர்களுக்குச் சாதியிலுள்ள சமயமே பெரிதாயிருந்தது.

கண்டியை ஆண்ட இரண்டாவது இராசசிங்கன் ஒல்லாந்தர் உதவியைப் பெற்று இலங்கையின் கரைநாடுகளிலிருந்து போர்த்துக்கேயரைக் கலைக்க முயன்றான். மட்டக்களப்பில் அல்லது கொட்டியாரத்தில் ஒரு கோட்டை கட்டுவதற்கு ஒல்லாந்தருக்கு அனுமதி கொடுத்தால், தான் இலங்கை முழுவதற்கும் அரசனாய் இருக்கலாம் என எண்ணினான். எனவே ஒல்லாந்தரின் கடற்படைத் தலைவன் வெஸ்ரர் வொல் இராசசிங்கன் உதவியுடன் 18.5.1638 இல் கோட்டையைக் கைப்பற்றினான். அதன்பின் 23.5.1638 இல் கணடியரசனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் ஓர் உடன்படிக்கைஎழுதப்பட்டது.

அதன்படி கண்டிநாட்டு விளைபொருட்களை ஏற்றுமதி செய்யும் ஏகபோக உரிமையை ஒல்லாந்தர் பெறவும், அவர்கள் கண்டியரசனுக்குப் பொருளுதவி, படையுதவி முதலியன செய்யவும் உடன்பாடு தெரிவித்தனர். அதன்பின் படிப்படியாக இலங்கைக் கரைநாடுகளில் செல்வாக்குப் பெற்ற ஒல்லாந்தர், போர்த்துக்கேயரின் கோட்டைகளையும் வலுநிலையங்களையும் ஒவ்வொன்றாகக் கைப்பற்றி அவர்களை 1658 ஆம் ஆண்டு யூன் மாதத்துக்குள் இலங்கையை விட்டு அகற்றிவிட்னர்.

ஒல்லாந்தர் கைப்பற்றிய இடங்களைத் தன்னிடம் கொடுப்பார்கள் என இராசசிங்கன் எண்ணினான். தான் அவர்களுக்கு ஓரிடம் கோட்டை கட்டக் கொடுப்பதாகவே வாக்களித்தான். ஆனால் ஒல்லாந்தர் நாடுகளைக் கொடுக்காமல் இருந்தபோது அவனே அவற்றைக் கேட்டான். அதற்கு அவர்கள் தங்கள் படைச் செலவை இராசசிங்கன் கொடுக்க வேண்டும் என்றார்கள்.

**க.சி.குலரத்தினம்**

இராசசிங்கனால் செலவைக் கொடுக்க இயலவில்லை. அவன் அவற்வாறு கொடுப்பதை விரும்பவுமில்லை. அதன் பெறுபேறாக ஒல்லாந்தரைக் கருவியாகவும் தான் கருத்தாவாகவும் இருக்க எண்ணிய இராசசிங்கன் இப்போது ஒல்லாந்தர் கையில் கருவியானான். (தொடரும்)

# சிறுவர்களின் உரிமைகளும் சிறுவர்களின் ஊழியமும்

*(நேற்றைய தொடர்ச்சி)*

நாம் சிறுவர் துஷ்பிரயோகங்களாக ,

- சிறுவர்களைத் துன்புறுத்தல்
- சிறுவர்களை வேலைக்கமர்த்தல்
- போஷாக்கற்ற உணவு வழங்குதல்
- அவசியமின்றிஅதட்டுதல்
- அவசியமின்றி கோபமூட்டுதல்
- பாலியல் நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல்
- கருத்துக்களுக்கு மதிப்பளியாமை
- எதிர்பார்க்கும் அன்பையும் ஆதரவையும் வழங்காமை
- பிள்ளையை வீட்டு வேலைக்கமர்த்தல்
- உணவு , உடை ,சுத்தம் ஆகியவற்றில் அக்கறை காட்டாமை.

**சர்வதேச குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினத்தையொட்டி வரையப்பட்ட தொகுப்பு**

- குழந்தைப் பருவ கல்வியை மறுத்தல்
- மன அதிர்ச்சி ஏற்படும்படி தண்டித்தல்
- பிள்ளைகளின் நோய் ,நொடிகள் பற்றி அக்கறை கொள்ளாமை.
- பிள்ளையை பாடசாலைக்கு அனுப்பாமை

இவ்வாறான அம்சங்களை சிறுவர் துஷ்பிரயோகம் என்ற வரையறைக்குள் உள்ளடக்கினாலும் இன்றைய தினம் நாம் முக்கியமாகப் பார்ப்பது சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் - சிறுவர் ஊழியம் என்ற தன்மையை ஆகும்.


**சிறுவர் ஊழியம்**

சிறுவர் ஊழியம் என்பது சிறுவர் பராயத்திலேயே தமது வயதிற்கு, தேவைக்கும் அப்பாற்பட்ட வேலைகளைச் (சுமைகளை) செய்வது ஆகும். இவற்றை ஒழுங்காக வரைவிலக்கணப்படுத்தின் 16 வயது பூரணப்படுமுன் தமது குடும்ப சுமைகளை தேவைகளை நிறைவேற்றும் முகமாக ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடு தலைக் குறிக்கின்றது.

இவ்வாறு ஊழியத்தில் ஈடு படும் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை வரிசைப்படுத்தினால்,

- சிறுவர்கள் அறிவு பெற தவறுகின்றனர்.
- கல்வி கற்கும் வாய்ப்பு இழக்கப்படுகின்றது.
- விளையாடும் உரிமை யை இழக்கின்றனர்.
- நண்பர்களுடன் கூடி மகிழும் தன்மையை இழக்கின்றனர்.
- மகிழ்ச்சிகரமான சூழலை இழக்கின்றனர்.
- உடல் ஆரோக்கியத்தை இழக்கின்றனர்.
- சிறுவர், சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுகின்றனர்.
- கொடுமைப்படுத்தப்படுகின்றதனால் உடல், உள காயங்களுக்குள்ளாகின்றனர்.
- வயதுக்கு மிஞ்சியோருடனான சேர்க்கை

இதன்காரணமாக –
வேண்டப்படாத பழக்கங்கள்
தீயவற்றை அறியும் ஆவல்
மது ,புகைப்பிடித்தலுக்கு அடிமையாதல்
முறையற்ற பாலியல் தொடர்புகள்
போன்ற துன்பங்களை அனுபவிப்பதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.



இதற்காகநாம் நாட வேண்டிய இடங்களையும், இது தொடர்பான உத்தியோத்தவர்களையும் வரிசைப்படுத்தினால்,

*மாவட்ட அளவில்,*

- மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு (அரச அதிபர், சகல பிரதேச செயலர்கள், சகல திணைக்கள அதிகாரிகள்)
- சிறுவர் பெண்களுக்கான பிரிவு (பொலீஸ்)

*பிரதேச அளவில்,*

- பிரதேச மட்ட சிறுவர் கண்காணிப்பு குழு (பிரதேச செயலர்,சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நன்னடத்தை), பிரிவிலுள்ள திணைக்கள உத்தியோகத்தர்)

*கிராம அளவில்,*

- கிராம மட்ட சிறுவர் கண்காணிப்பு குழு ( கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், கிராம மக்கள், மதத்தலைவர், கிராம மட்ட தலைவர்கள்)

*குடும்ப அளவில்,*

- பெற்றோர், பராமரிப்பாளர்

இவ்வாறான அமைப்பு நம் மத்தியில் இருக்கும்போது, இவ்வாறான பிஞ்சு உள்ளம் கொண்ட, வெள்ளை மனம் கொண்ட கடவுளின் பிள்ளைகளாகக் கருதப்படும் சிறுவர்களைப் பாதுகாத்து, அவர்களது உரிமை மீட்டெடுத்த சந்தோஷமான சூழலை ஏற்படுத்துவதும் நம் எல்லோரினதும் பொறுப்பு ஆகும். இதை ஒவ்வொருவரும் மனதில் நிறுத்தி, வேலை கொள்வோருக்கான தண்டனையை பெற்றுக் கொடுப்பதுடன் தொடர்ந்து எதிர்காலத்திலும் சிறுவர் களின் சிறந்த நலனைப் பேண முடியும் என்பதில் ஐயமில்லை. ☒

**S.M.E. பிறியேட்**
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
பிரதேச செயகம்,
நல்லூர்


# வீரவன்ஸவுக்கு ஆதரவு வழங்கவேண்டியது பிள்ளையானின் தர்மீகப் பொறுப்பு?

## அரசியல் ஆய்வாளர் பேரா.யுவி தங்கராஜா



(கொழும்பு) கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று தேசிய விடுதலை முன்னணி என்ற ஒரு புதுக் கட்சியைத் தொடங்கியுள்ள விமல் வீரவன்ஸ இடையில் கடந்த சனிக்கிழமையன்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இவ்விரு புதிய கட்சிகளும் தங்களுடைய நீண்டகால அரசியல் நலன்களுக்கு ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கவேண்டும் என்பதை உணருவதால் ஏற்பட்ட ஒரு அரசியல் நகர்வாக இச் சந்திப்பு கருதப்படுகிறது. இச்சந்திப்பின் அரசியல் பின்புலம் மற்றும் முக்கியத்துவம் குறித்து இலங்கை அரசியல் விவகார ஆய்வாளர் பேராசிரியர் யுவி. தங்கராஜா கருத்துத் தெரிவிக்கையில், டி.எம்.வி.பி. போன்ற அமைப்புக்கள் ஆயுதக் களைவு செய்யவேண்டும் என்கிற விவகாரத்தில் ஜே.வி.பி தலைமைத்துவத்தின் நிலைப்பாட்டிலிருந்து விமல்வீரவன்ஸ சற்று முரண்பட்டிருந்தார். விடுதலைப் புலிகளிடம் இருந்து அச்சுறுத்தல் நிலவுகின்ற சூழலில் டி.எம்.வி.பி. போன்ற அமைப்பினர் ஆயுதக் களைவு செய்வது சாத்தியமாகாது என்ற கருத்தை வீரவன்ஸ கொண்டிருந்தார்.



ஆனால் அவர்கள் கட்டாயம் உடனடியாக ஆயுதக்களைவு செய்ய வேண்டும் என்பது ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் நிலைப்பாடாக இருந்தது. இந்த முரண்பாடானது ஜே.வி.பி.கட்சியிலிருந்து வீரவன்ஸ விலகியதன் காரணங்களுள் ஒன்றாகக் கூறப்பட்டிருந்தது. ஆகவே வீரவன்ஸவுக்கு ஆதரவு வழங்குவதென்பது பிள்ளையானுடைய தார்மீகப் பொறுப்பாக கூட இருக்கலாம் என்று பேராசிரியர் தங்கராஜா தெரிவித்தார். (அ)

# ஊழிய நம்பிக்கை நிதியத்தால் சுயதொழில் முயற்சிக்களுக்காக சலுகை திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கும் சலுகைகளை வழங்கக் கூடிய திட்டமொன்றை ஊழியர் நம்பிக்கை நிலையம் அறிமுகப் படுத்தியுள்ளது.

மாதாந்த 200 ரூபாய் அல்லது அதற்கு கூடிய தொகையை வழங்குவதன் மூலம் இந்த திட்டத்துக்கு அவர்களால் உதவக் கூடியதாக இருக்கும் எனவும் நிலையத்தின் தலைவர் கே.எம். எ கொடவத்த தெரிவித்துள்ளார்.

ஆயுட் காப்புறுதி இருதய மற்றும் சிறுநீரக சத்திர சிகிச்சைகள் , சிறுவர் களுக்கான புலமைப் பரீட்சை பரிசில்கள் போன்றவற்றுக்கு அங்கத்தவர்கள் நிவாரணங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

# சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேசம் சிம்பாப்வேயில் தலையிட வேண்டும்

## சிம்பாப்வே பேராயர் அழைப்பு



சர்வதேச சமூகமானது அவசியமேற்படும் பட்சத்தில் பலவந்தமாகவேனும் சிம்பாப்வேயில் தலையிட வேண்டும் என அந் நாடு பேராயர் டெஸ்மொன்ட் ரூரு வலியுறுத்தியுள்ளார்.

சிம்பாப்வேயில் சமாதானத்தை மீள ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் படை நியமிக்கப்படுவதற்கு தான் ஆதரவு வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் ஆபிரிக்க ஒன்றியத் தலைவர்கள் சிம்பாப்வேயின் சட்டபூர்வமான ஜனாதிபதியாக முகாபேயை அங்கீகரிக்கக் கூடாது என பேராயர் டெஸ்மொன்ட் ரூரு அழைப்பு விடுத்தார்.

இந்நிலையில் முகாபே, கடந்த சனிக்கிழமை இரவு உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் உரையாற்றுகையில், தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக பிரகடனம் செய்தார்.

"நாங்கள் எதிர்க்கட்சி பலம் பெற்றுத் திகழும் பிராந்தியத்திலான அனைத்து 26 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளோம். கடந்த மார்ச் மாதம் மேற்படி பிராந்தியத்தில் ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றிபெற்றோம்" என றொபேர்ட்முகாபே குறிப்பிட்டார்.

தேர்தல் பெறுபேறுகள் வெளிவரத் தாமதமாகின்றபோதும், வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாம் சுற்று ஜனாதிபதித் தேர்தலின் ஒரேயொரு வேட்பாளர் என்ற ரீதியில் முகாபே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது பதவியை மீளப் பொறுப்பேற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியான ஜனநாயக மாற்றத்திற்கான இயக்க கட்சித் தலைவர் மோர்கன் தஸ்வான்கிரே தமது ஆதரவாளர்கள் மீதான வன்முறைத் தாக்குதல்கள் அதிகரித்த நிலையில் ஜனாதிபதி தேர்தலிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாக அறிவித்திருந்தார்.

ஆனால் அந் நாட்டு தேர்தல் ஆணையகம் தேர்தல் பட்டியலிலிருந்து அவரது பெயரை அகற்ற மறுத்திருந்தது. இந்த தேர்தல் தொடர்பில் தஸ்வான்கிரே ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில்,

"பாராளுமன்றத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் எம்மிடமுள்ளது.

அதன் பிரகாரம் சிம்பாப்வேயிற்கான புதிய அரசியலமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்படவுள்ளோம்.

இதன்மூலம் முகாபேயின் அதிகாரங்களைக் குறை த்து அவரை பெயரளவிலான தலைவராக மாற்றக்கூடிய சாத்தியமுள்ளது" என்று தெரிவித்தார். (அ)

# வடதுருவப் பனிப் பாறைகள் முழுமையாக உருகும் அபாயம்


## விஞ்ஞானிகள் எச்சரிக்கை



பூகோள வெப்பமாதல் காரணமாக வடதுருவத்தில் எதிர்வரும் கோடை காலத்தில் பனிக்கட்டி இல்லாத நிலை உருவாக வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

ஆர்டிக் பிராந்திய பகுதி பனியானது மிகவும் மெல்லியதாக உள்ளமை காரணமாக எதிர்வரும் கோடை காலத்தில் முழுமையாக உருகும் அபாயமுள்ளதாக கொலராடோவிலுள்ள தேசிய பனி மற்றும் பனிக்கட்டி தரவு நிலைய விஞ்ஞானியான மார்க் ஸெர்ரேஸே தெரிவித்தார். (அ)

# குடியேற்ற சீர்திருத்தம் தொடர்பில் ஒபாமா- மக்கெயின் கருத்து மோதல்



(வோஷிங்டன்)

அமெரிக்க குடியேற்ற சீர்திருத்தமொன்று தொடர்பில் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் பாரக் ஒபாமாவுக்கும் குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோன் மக்கெயினுக்குமிடையே கருத்து மோதலொன்று இடம் பெற்றுள்ளது.


அமெரிக்காவில் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் பிரவேசத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக அந்நாட்டின் எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டியது அவசியமென மக்கெயின் வோஷிங்டனில் இடம்பெற்ற மாநாடொன்றில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

'கடந்த வருடம் குடியேற்ற சீர்திருத்த சட்டமூலமொன்றுக்கு அமெரிக்க பாராளுமன்ற மேல்சபையினது அங்கீகாரத்தைப் பெற மக்கெயின் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவித்த ஒபாமா அவர் அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதிலிருந்து ஒதுங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேற்படி குடியேற்ற சீர்திருத்தமானது அமெரிக்காவிலுள்ள 12 மில்லியன் சட்ட விரோதக் குடியேற்றவாசிகளுக்கு குடியுரிமை பெற வழிவகை செய்து தருகிறது.

ஜனாதிபதி புஷ்ஷின் குடியேற்ற சீர்திருத்தத்துக்கு ஆதரவளித்த குடியரசுக் கட்சி செனட் சபை உறுப்பினர்களில் மக்கெயினும் ஒருவராவார்.

மெக்ஸிகோவுடனான அமெரிக்க எல்லைப் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பில்தான் பிரதான கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த மக்கெயின், இது விடயத்தில் மனிதாபிமானமற்ற கொடூரமான அணுகுமுறை கையாளப்படமாட்டாது எனத் தெரிவித்தார். (அ)




# உலக தரிசனம்

## மாவோயியவாதிகளின் தாக்குதலில் ஒரிஸாவில் 50 பொலிஸார் பலி?



இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒரு படகு ஏரியில் கவிழ்ந் ததில் குறைந்த பட்சம் 50 பொலிஸார் காணாமல் போயுள்ளனர்.

அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. கிளர்ச்சிக்காரர்களுடன் மோதுவதற்காக விசேட படையணியொன்று படகில் சென்று கொண்டிருந்ததாக தெரிகிறது.

மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் ஏரி ஒன்றில் படகு சென்றிருந்தவேளை அருகில் இருந்த மலைக்குன்றுகளிலிருந்து துப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. (அ)

# மூன்று தசாப்தத்துக்கு முன் கொலை செய்யப்பட்ட ஆப்கான் ஜனாதிபதியின் உடல் கண்டுபிடிப்பு

(காபூல்)

மூன்று தசாப்த காலத்திற்கு முன்பு சோவியத் ஆதரவு இராணுவ ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மொஹமட் தாயுத் கான் அவரது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோரின் சடலங்களைக் கொண்ட பாரிய புதைகுழிகளை ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

16 சடலங்கள் மற்றும் 12 சடலங்களைக் கொண்ட இரு புதைகுழிக்ள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. ஆடைகள் மற்றும் பாதணிகள் என்பனவற்றை வைத்து சடலங்களை அடையாளங் கண்டுள்ளோம் என மொஹமட் தாயுத்கானின் பேரனான மொஹமட் காஸி தாயுத் தெரிவித்தார்.

தாயுத் கானின் குடும்பத்தவர்களது வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி கல்லறைகளை தேடிக் கண்டுபிடிக்க கடந்த ஏப்பிரல் மாதம் விசேட ஆணைக்குழுவொன்று ஜனாதிபதி ஹமீட்கர்சாயால் நியமிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் முதலாவது ஜனாதிபதியான தாயுத் கான் 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் படுகொலை செய்யப்பட்டார். (அ)

# மலேசியாவின் முன்னாள் துணைப் பிரதமர் துருக்கித் தூதரகத்தில் அடைக்கலம்

(கோலாலம்பூர்)

மலேசிய எதிர்க்கட்சித்தலைவர் அன்வர் இப்பிராஹிம் கோலம்பூரில் உள்ள துருக்கிய தூதரகத்தில் அடைக்கலம் தேடியுள்ளார்.

தகாத பாலுறவுக் குற்றச்சாட்டுகளுடன் அவர் மீது புதிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தன்னைப் பிடித்து தடுத்து வைத்திருக்கும் சமயத்தில் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக் குறித்து தான் அஞ்சுவதாக தெரிவித்த அன்வர் தான் துருக்கியிடம் அரசியல் தஞ்சம் எதுவும் கேட்கவில்லை என்றும் மாறாகத் தன்னுடைய பதுகாப்புக்கு மலேசிய அதிகாரிகளிடமிருந்து உத்தரவாதத்தையே எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

தன்மீது மீண்டும் அபாண்டமாகப் பழி சுமத்த அரசாங்கம் குற்றச்சாட்டுகளைச் சோடிக்கிறது என்றார். ஆனால் மலேசியப் பிரதமர் அப்துல்லா படாவி அவர்கள் அதை மறுக்கிறார்.



1998 இல் துணைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட அன்வர் முறையற்ற பாலுறவு மற்றும் ஊழல் தொடர்பாக ஐந் தாண்டு சிறைவாசம் கண்டவர்.

இந்தக் குற்றச் சாட்டுக்களை தொடர்ந்து மறுத்துவரும் அவர், அவை அரசியல் காரணங்களுக்காகத் தன் மீது சுமத்தப் பட்டவை என்று தொடர்ந்து கூறி வந்துள்ளார்.


இவ்வாண்டு முற்பகுதியில் மீண்டும் வெளி அரசியலில் பெரிதாகப் புகுந்து கொண்டார். (அ)

# கடத்தப்பட்ட இரு படையினரை மீட்க கைதிகளை விடுவிக்க இஸ்ரேல் சம்மதம்

லெபனானிய இஸ்லாமியக் குழுவான ஹிஸ்புல்லாவுடன் கைதிகள் பரிமாற்றத்துக்கு இஸ்ரேலிய அமைச்சகம் பெரு ஆதரவுடன் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஈராண்டுக்கு முன் கடத்தப்பட்ட இரண்டு இஸ்ரேலியப் படையினருக்கு பதிலாக லெபானனியக் கைதிகளை விடுவிப்பதே இந்தத் திட்டம்.

எனினும் பிரதமர் எஹுத் எல்மேர்த் ஹுஸ்புல்லா அணியினரால் கடத்திச் சென்று சிறை வைக்கப்பட்ட இரண்டு இஸ்ரேலியப் படையினரும் இறந்துவிட்டனர் என்றே கருதுகின்றார்.



கடத்தப்பட்ட இஸ்ரேலியப் படையினர் இருவர்

இஸ்ரேலினால் விடுவிக்கப்படவுள்ள லெபனானியக் கைதிகளில் 1979 இல் இஸ்ரேலிய எல்லைப்பகுதியில் உயிர்கள்ளை காவு கொணட தாக்குதலகள் தொடர்பாக சிறை வைக்கப்பட்ட சமீர் கந்தாரும் அடக்கம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. (அ)

# பிலிப்பைன்ஸ் விமான விபத்தில் 18 பேர் பலி

(ஜகார்த்தா)

18பேருடன் மாயமான பிலிப்பைன்ஸ் இராணுவ விமானத்தின் சிதைவுகள் சனிக்கிழமை இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப் பட்டன.

'கஸா சி-212' என்ற இந்த விமானத்திலிருந்து 13-பயணிகள் மற்றும் 5 விமான உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரும் பலியாகியுள்ளதாக இந்தோனேசிய விமானப் படைப் பேச்சாளர் செயறுத்தீன்ரே தெரிவித்தார்.

இவ் விமானத்தில் பயணம் செய்தவர்களில் பிரித்தானியா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் பிரஜைகள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



சீரற்ற காலநிலையே இவ் விபத்துக்கு காரணமென நம்பப்படுகின்றது. (அ)

கேவலமான மனிதனாய் இருப்பதை விட – ஒரு நல்ல குரங்காய் இருக்கலாம்.
–கிரிஸ்

வலம்புரி

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆர்ப்பாட்டமே வேலை

அரச பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக இடம்பெற்ற போட்டிப் பரீட்சையில் குறித்த புள்ளிகளைப் பெற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை நேற்றைய தினம் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

எனினும் போட்டிப் பரீட்சைக்கு தோற்றியிருந்தும் நேர்முகப் பரீட்சைக்கு தம்மை அழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து வேலையற்ற பட்டதாரிகள் மறியற் போராட்டம் நடத்தினர்.

இதனால் நேர்முகப் பரீட்சை தடைப்பட்டுப் போனது. நேர்முகப் பரீட்சைக்கு ஆவலோடு சென்றவர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

தமது பல்கலைக்கழக நண்பர்களின் மறியற் போராட்டத்திற்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் தலையைக் குனிந்தபடி வீடு வந்து சேர்ந்தவர்களிடம் பெற்றோர்கள் வேலை கிடைக்குமா? மகனே –மகளே என்று கேட்டிருப்பார்கள்.

வீட்டிற்குள் அடைந்து கிடப்பதைத் தவிர வேறு விதியை பாழாய்ப்போன பிரம்மன் எம் தலையில் எழுதவில்லையோ என்ற வேதனை தரும் வார்த்தையோடு நேர்முகப் பரீட்சைக்கு எடுத்துச் செல்லப்பட்ட கோவை மேசையில் விழுந்திருக்கும்.

இதுதான் இலங்கையின் வேலையற்ற பட்டதாரிகளின் நிலை என்பதை, யுத்தம் நடத்தியே தீருவோம் என சூளுரைக்கும் அமைச்சர் பெருமக்கள் அறிவதற்கு சந்தர்ப்பம்தான் ஏது?

படி,படி என்ற ஆலோசனைகளும், திணிப்புக்களும், தரப்படுத்தல்களும் என்ற பல்வகை உளநெருக்கீடுகளை கடந்து பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை நிறைவு செய்தும் வேலை இல்லையே என்ற உள்ளக் கவலை ஆற்றுப்படுத்தக் கூடியதல்ல.

இவையெல்லாம் அரசின் திட்டமிடப்படாத பொருளாதார நடவடிக்கைகளும், யுத்தத்தின் மீது கொண்டுள்ள அளவு கடந்த பிரியமுமே காரண்ம் என்ற முடிபில் எந்த மாற்றமும் இல்லை.

அதேநேரம் நேற்றைய தினம் நேர்முகப் பரீட்சை நடைபெற இருந்தவேளை தம்மை அழைக்கவில்லை என்பதற்காக அந்த நேர்முகப் பரீட்சை இடம்பெறாமல் தடுத்தமை நியாயமானதல்ல என்ற முடிபை வேலையற்ற பட்டதாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில், பட்டதாரிகளுக்கு போட்டிப் பரீட்சை நடத்துவதென்பதில் எவரும் உடன்பாடு காண முடியாது.

1998ஆம் ஆண்டில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும்போது போட்டிப் பரீட்சை நடத்தவேண்டுமென்ற கருத்து அரச தரப்பால் முன்வைக்கப்பட்டது.

ஆனால் அப்போது இருந்த யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அதனை கடுமையாக எதிர்த்ததுடன், போட்டிப் பரீட்சையை நடத்தாமல் தடுப்போம் ஏன்றும் எச்சரிக்கை செய்திருந்தது.

இதனால் போட்டிப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சை நடைபெற்றதும், பட்டம் பெற்ற ஆண்டை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்கப்பட்டதுமான வரலாறு உண்டு.

இந்நிலையில் போட்டிப் பரீட்சையை பட்டதாரிகள் எதிர்த்திருப்பின் அதனை நியாயமான செயலாக கொள்ள முடியும்.

இதை விடுத்து போட்டிப் பரீட்சைக்கு தோற்றிவிட்டு அதில் கூடிய புள்ளி எடுத்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தும்போது அதனை எதிர்ப்பது அர்த்தமுள்ள செயலாக கருதமுடியாது.

# சமாதானம் ஏற்பட வேண்டுமானால் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்

## கிழக்கு மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

(திருகோணமலை)

நாடு சமாதானத்தை நோக்கி நகர வேண்டுமானால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். யுத்தத்தை நடத்திக் கொண்டு சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹில்புல்லாஹ் தெரிவித்தார்.

திருகோணமலை கப்பல்துறை கிராமத்தின் ஆயுர்வேத மருத்துவ மனையில் பஞ்சகர்ம சிகிச்சை பிரிவினை திறந்த வைத்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

யுத்தத்தின் விளைவாக கோடிக்கணக்கான பணம் செலவிடப்படுகின்றது. இதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் மந்தநிலையை அடைந்துள்ளது.

விலைவாசிகளும் ஏறிக் கொண்டே செல்கின்றன. ஏறிக்கொண்டு செல்லும் விலைவாசியைக் குறைப்பது சிரமம். ஆனால் திட்டமிட்டு செயற்பட்டால் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். தனியார் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

யுத்த சூழ்நிலை காரணமாக வெளிநாட்டவர் முதலிடத் தயங்குகின்றனர் . அவ்வாறு முதலீடு செய்வதானால் கோடிக்கணக்கான பில்லியன் ரூபாவினை முதலீடு செய்ய முடியும் .

கிழக்கு மாகாணம் இந்த நாட்டின் வளம் மிக்க மாகாணம். சகல இனங்களும் இங்கு வாழ்கின்றன. விவசாயம், மீன்பிடி, தொழில்வளம் என பல்வேறு வளங்களும் இங்கு நிரம்பியுள்ளன. அம்பாறையில் விவசாயத்தையும் மட்டக்களப்பில் மீன்பிடித் துறையையும் பெருமளவில் வளப்படுத்த முடியும்.

திருகோணமலை மாவட்டத்தை மேலும் சிறந்த தொழில் வளம் மிக்க பிரதேசமாக மாற்றியமைக்க முடியும்.

உலகின் மிகச் சிறந்தஅழகான இயற்கைத் துறைமுகம் இங்கு உள்ளது. இவ்வாறான துறைமுகம் வெளிநாட்டில் இருந்தால் பலகோடி பில்லியன் பெறுமதியான துறைமுகமாக மாறியிருக்கும்.

இத்தனை பாதிப்புக்களுக்கும் நடந்து கொண்டிருக்கும் யுத்த சூழலே காரணமாகும் என்றார். (அ)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தின் விளக்கமறியல் செப்.5 வரை நீடிப்பு

## ஊடக அமைப்புக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 115 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை தொடர்ந்தும் செப்ரெம்பர் 5ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி அவுட்ரீச் இணையத்தளத்தின் ஆசிரியரும், சுதந்திர ஊடகவியலாளருமான திஸ்ஸநாயகம் மற்றும் அச்சக உரிமையாளரான ஜசிகரன், அவருடைய மனைவி வளர்மதி ஆகியோர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு 115 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று திங்கட்கிழமை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நிறுத்தப்பட்டபோது, இவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்தும் இடம் பெறுவதால் அவர்களை தடுத்து வைப்பதற்கு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருந்தனர்.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் உட்பட மூவரையும் எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதிவரை தடுத்து வைப்பதற்கு அனுமதி வழங்கியது.

திஸ்ஸநாயகத்திற்கு பார்வைக் கோளாறு இருப்பதால் தேவை ஏற்படின் அரசாங்க வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்று அவருக்கு சிகிச்சை வழங்க வேண்டுமென்றும் நீதிமன்றம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டது.

இதற்கிடையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நூறு நாட்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை விடுதலை செய்யக் கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்னால் ஊடக அமைப்புக்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தியுள்ளன.

தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளரை விடுவிக்குமாறு கோரி சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர்சங்கம், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், முஸ்லிம் மீடியா போரம், ஊடகப் பணியாளர்கள், தொழிற்சங்கங்களின் ஒன்றியம் ஆகிய 5 ஊடக அமைப்புக்கள் இணைந்து முற்பகல் 10.30 மணி முதல் நீதிமன்றத்திற்கு முன்னால் அமைதியான கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியிருந்தன.

115 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் திஸ்ஸநாயகத்தை விடுதலை செய் என்னும் பதாகைகளை தாங்கியவாறு ஊடகவியலாளர்கள் பலர் இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பிற்பகல் ஒரு மணிவரை இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் பின்னர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்கள் நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு விசாரணைகளுக்கு சமுகமளித்திருந்தனர். (ச–5)

## அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

மத்திய – மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி வியாழக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற 9–வது வருடாந்த மாநாட்டிலேயே புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகிகளின் விபரம் வருமாறு,

தலைவர் இ.இரத்தினசிங்கம் (யாழ். மாநகர சபை), உப தலைவர் த.கணேசமூர்த்தி (மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை), பொதுச் செயலாளர் தி.உதயசூரியன் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம்), உப செயலாளர் எஸ். ஜெயசங்கர் (யாழ்.பிரதேச செயலகம்), பொருளாளர் செல்வி லூயிஸ் பத்மினி (யாழ்.பிரதேச செயலகம்)

நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திருமதி சி.திருக்குமரன் ;கே.சுரேந்திரராசா, அ.பத்மதாசன்; க.சந்திரசேகரம்பிள்ளை, செல்வி க.வதனாம்பிகை, திருமதி பி.கிருபாகரன், திருமதி மோகன் ரூபா, திருமதி ச.வசந்தாதேவி, கே.தயாபரன், திருமதி கி.தர்சினி. (ச)

ஓலைச் சுவடிகள் 53

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### ஈரத்துணி தலையில் வைத்து தூங்கலாமா?

தலையில் ஈரத்துணி வைத்து தூங்குவதைக் கண்டால் பெரியவர்கள் கண்டிப்பதுண்டு. ஏதோ சில காரணங்களால் குழந்தைகளும் பெரியோர்களும் சில நேரம் இரவில் குளிக்க நேரிடும். அப்போது ஈரத்துணிகளை படுக்கையிலோ தலையணையிலோ வைத்து தூங்குவதுண்டு. இவ்வாறு செய்வது தீமை என்று பெரியோர்கள் கூறுவதுண்டு.

பகல் நேரம் உடலில் இருந்த நோயணுக்கள் ஈரத்துணியில் படிந்திருக்கும். அவை மறுபடியும் உடலுக்கே திரும்பி வரும் நிலை ஏற்படும். மேலும் ஈரத்துணிகள் தலைக்கடியில் வைத்திருந்தால் ஜலதோஷ பாதிப்புண்டாகும் என்றும் நமக்குத் தெரியும்.

இதனால் தூங்கும் போது ஈரத்துணிகள் படுக்கையில் வைப்பது கெடுதல் உண்டாகும் என்று விதி வகுத்தனர்.

# படைத்தளபதிகள் கூறுவதைப் போல் புலிகளின் தளம் மணலாற்றில் இல்லை

## மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

படைத்தளபதி கூறுவதனைப் போன்று விடுதலைப் புலிகளின் 1-4தளம் மணலாற்றில் தற்போது இல்லை .அது 1991ஆம் ஆண்டில் ஜனறல் டென்சில் கொப்பேக்கடுவ தலைமையில் நடைபெற்ற இடிமுழக்கம் நடவடிக்கையிலேயே அழித்தொழிக்கப்பட்டுவிட்டது. புலிகளின் அந்தத் தளம் இடமாற்றப்பட்டுவிட்டது என்று இராணுவத்தின் முன்னாள் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது, மணலாறு காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டளைத்தளம், கேந்திரத்தளம், செய்மதித்தளம், பயிற்சித் தளம் என 1-4 தளங்கள் ஒன்றாக அமைந்த இடமே 1-4 தளம் எனப்படுகின்றது.

### இடி முழக்கம் நடவடிக்கையில் முற்றாக அழிக்கப்பட்டது

இந்திய அமைதிப்படை வடக்கில் நிலை கொண்டிருந்த காலப்பகுதியில் அந்தத்தளம் பிரபாகரனின் பிரதான தலைமையகமாக விளங்கியது. ஆனால் 1991ஆம் ஆண்டில் நாம் மேற்கொண்ட இடி முழக்கம் நடவடிக்கையில் அது முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது.

அந்த நடவடிக்கையில் நான் நடவடிக்கை பொறுப்பதிகாரியாகவும் இரண்டாவது பொறுப்பதிகாரியாக தற்போதைய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் பணியாற்றினோம். எமது அந்தத் தாக்குதலின் பின்னர் புலிகள் அந்தத் தளத்தை கிளிநொச்சிக்கோ ஒட்டுசுட்டான் பகுதிக்கோ மாற்றிவிட்டார்கள் என நினைக்கின்றேன்.

எமது தாக்குதலின் பின்னர் மீண்டும் அதே இடத்தில் அந்தத் தளத்தை நிர்மாணித்து அதுவும் ஜனகபுர, கஜபாபுர என்ற இரண்டு சிங்களக் குடியேற்றங்களுக்கு மத்தியில் அதனைப் புலிகள் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள்.

### அமைதிப் பேச்சுக்கள் சாத்தியமில்லை

விடுதலைப்புலிகளிடமிருந்து முற்றாக ஆயுதங்கள் களையப்படும் வரை அமைதிப் பேச்சுக்கள் சாத்தியமற்றவை. புலிகளின் கொடூரமான பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு சமனும் எதிருமான பதில் அளிக்கப்பட்டு விடுதலைப்புலிகள் என்ற நாமம் ஒவ்வொருவரினது மனதிலிருந்தும் அழிக்கப்பட வேண்டும்.

### கருணாவின் பிளவு

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட அமைதி ஒப்பந்தத்தால் நல்லவையும் நடந்துள்ளன. கெட்டவையும் நடந்துள்ளன.உதாரணமாக கருணாவின் பிளவைக் குறிப்பிடலாம். இது முழு இலங்கைக்கும் நன்மை தந்த ஒரு விடயம். எதிர்மறையான விளைவுகள் என்றால் அமைதிப் பேச்சு காலத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆயுதக் கொள்வனவுகளைக் குறிப்பிடலாம்.

ஐக்கிய தேசியக்கட்சி எதிர்காலத்தில் ஆட்சி அமைத்தால் நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு நான் பொறுப்பாக பதவி வகிப்பேன். நாட்டின் பாதுகாப்பை எவ்வாறு கையாள்வது என்று எனக்கு நன்றாகவே தெரியும். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு அதிக இழப்பை ஏற்படுத்தியவன் என்ற வகையில் புலிகள் எனக்கு இலக்கு வைத்திருப்பார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் இவற்றுக்கெல்லாம் நான் அஞ்சுபவனல்ல. (அ)

# மன்னார் ‘உயர்நெல்விளைச்சல் பிரதேசம்’ இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில்

## பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தை முழுமையாக கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையின் ஒரு அங்கமாக உயர் நெல்விளைச்சல் பிரதேசம் இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார். மன்னாரின் முக்கிய பகுதியான 120சதுர கிலோமீற்றர் பரப்பளவுள்ள ‘உயர் நெல் விளைச்சல் பிரதேசம்’ கைப்பற்றப்பட்டிருப் பதாக அவர் குறிப்பிட்டார்.

ஒரு மாதத்துக்கும்மேலாக நீடித்த கடும் மோதல்களின் பின்னர் மன்னார் மாவட்டத்தின் பசுமை நிறைந்த பகுதியான உயர் நெல் விளைச்சல் பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. எனபிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கடந்த 2007 ஆம்ஆண்டு செப்ரம்பர் மாதம் மன்னார் மாவட்டத்தில் மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று குறிப்பிட்டிருக்கும் இராணுவப் பேச்சாளர் இதுவரை 2,100 ற்கும் அதிகமானவிடுதலைப்புலிகள் கெல்லப்பட்டும் 1, 500 ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாகவும் கூறினார்.

உயர் நெல்விளைச்சல் பகுதியை இழந்தமை விடுதலைப்புலிகளுக்குப் பாரிய பின்னடைவு. இராணுவத்தினருக்குப் பாரிய வெற்றி இறுதி இலக்கை எட்டும் இறுதிக் கட்டத்தில் அரசாங்கப் படைகள் உள்ளனர்.விடுதலைப் புலிகளின் கடல் வழி விநியோகப் பாதையான விடத்தல்தீவு உட்பட மன்னார் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளும் விரைவில்இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரப்படும் என பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.



விடுதலைப்புலிகள் பலமான எதிர்த் தாக்குதல்களை நடத்தியதால்இந்தப் பகுதிகளை மீட்பதற்கு இராணுத்தினர் கடுமையாகப் போராட வேண்டிஇருந்ததாகஇராணுவ பேச்சாளர் பிரகேடியர் உதயநாணயக்கார மேலும் கூறினார். எனினும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து இதுவரை எந்த தகவல்களும் வெளியிடப்படவில்லை. (அ)

# ஆசிரியர் பயிற்சி நெறியை மீண்டும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி நெறி ஆண்டு அடுத்த வருடத்தில்இருந்து ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகவுள்ளது. கடந்த சில வருடங்களாக ஜுலை மாதத்தில் ஆசிரியர் கலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வந்தன. இந்த நடைமுறைமீண்டும் ஜனவரி மாதத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த வருடப் பயிற்சியை முடித்து வெளியேறவுள்ளஆசிரியர்களின் பயிற்சிக் காலம் ஜுன் மாதத்தில்இருந்து டிசம்பர் மாதத்தில் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை .

ஆசிரியர் கலாசாலைகளின் பயிற்சிக் காலம் கடந்தகாலங்களில் ஜனவரி - டிசம்பர் என்றவகையில் இருந்து வந்தது .இது இடையில்மாற்றம் செய்யப்பட்டு யூலை - யூன் மாதம் ஒரு வருடம் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது ஆசிரியர்கலாசாலை களில் பயிற்சி பெற்று வரும் இறுதி ஆண்டு பயிற்சி ஆசிரியர்களுக்கன பயிற்சி நெறிகள் நவம்பர் மாதம் முடிவடையும்.

டிசம்பர் மாதம் இறுதிப்பரீட்சைகள் நடைபெறும்.அடுத்த ஆண்டுக்கான கல்வி ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மோதல்களை நிறுத்தினால் அரசாங்கம் கவிழும்

## தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் மோதல் களை நிறுத்து வதற்கு அரசாங் கம் நடவடிக்கை எடுக்குமாயின் அது தம்க்குத் தாமே மரணஅத்தாட்சிப்பத்திரத்தை எழுதுவதற்குச் சமமாக அமைந்து விடும் தேசிய சுதந்திர முன்னணி எச்சரிக்கைவிடுத்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான மோதல்களை இடைநிறுத்தினால்அது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு முடிவு காலமாக அமைந்துவிடும் என பத்ரமுல்லவில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய சுதந்திர முன்ன்ணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு தொடர்பாக மக்கள் முறைப்பாடுகள் எதனையும் செய்யவில்லை. மோதல்களைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதிலேயே தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்புத் தன்மை தங்கியுள்ளது. அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் போருக்கும் அரசாங்கத்தின் நீடிப்புக்கும் இடையில் தொடர்புள்ளது.மோதல்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதைத் தவிர அரசாங்கத்துக்கு மாற்றுவழி இல்லை என்றார் விமல் வீரவன்ஸ .

அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்ற முற்பட்டால் அது அவர்களுக்கு மரணச் சான்றிதழை எழுதுவதைப் போன்றதாக அமையும் . எனக் குறிப்பிட்டிருக்கும் தேசிய சுதந்திர முன்னணி மோதல்களை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்குப் பல்வேறு தரப்புகளிடமிருந்து அழுத்தங்கள் கொடுக் கப்படுவதாகக் கூறியுள்ளது.

வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் மோதல்களை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் அயல் நாடுகள் மற்றும் எதிர்க்கட்சிகள் கைப்பொம்மையாகச் செயற்படும் சக்திகள் போன்றவற்றிடமிருந்து அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருவதாக விமல்வீரவன்ஸ ஊடகவியலாளர் மாநாட்டில் குற்றஞ்சாட்டினார்.”

எதிர்கால அரசில் நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த சனிக்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திர காந்தனுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகதெரிவித்த விமல் வீரவன்ஸ இந்தியாவின் கைப்பொம்மையாக பிள்ளையான் செயற்படுகின்றார் என நான்நினைக்கவில்லை. ஈ.பி.டி.பி கட்சிக்கும் தமிழ் மக்கள் விடுதலப்புலிளுக்கும் இடையில் மேதல்கள் இடம்பெற்று வருகின்றன. இரண்டு கட்சிகளும் இந்தியாவினால் ஆதரவு வழங்கப்படும் கட்சிகளாயின் இவ்வாறு இடம் பெறாது என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (அ)



கியூடெக்-கரித்தாஸ் ஊக்குவிப்பு செயல்திட்ட பிரிவினரால் பண்டத்தரிப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட க்ஷஇளையோரும் தலைமைத்துவமும்” என்ற பயிற்சியில் பங்குபற்றிய கரவெட்டி இளைஞர்கள் பங்குத்தந்தை நேசகுமார் அடிகளுடன் இணைந்து எடுத்துக் கொண்ட படம்.

# காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலயம்

# தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் ( 2008 - 07 - 01 )

## அருளாசிச் செய்தி



காரைநகர் இக்கரைப்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமான் இன்று தேரேறி அருட்காட்சி தருவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலய மஹோற்சவம் என்னும் பெருவிழா இறைவனுடைய ஐந்தொழிலையும் நினைவுபடுத்தி எடுத்தியம்பும் திருவிழாக்களில் தேர்த்திருவிழா சிறப்புடையதாகும். அஞ்ஞான இருளை நீக்கி மெஞ்ஞான ஒளியை ஏற்றுவதே இத்திருவிழா ஆகும். வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு இவ்வாலயத்தில் முருகப்பெருமான் எழுந்தருளியிருந்து அருள் புரிவது சிறப்புடையதாகும். மனித வாழ்வை உயர்நிலை அடையச் செய்வது ஆலயவழிபாடு. ஆலயத்தில் நடைபெறும் பூஜையும் வழிபாடும் மனிதனை மனிதநேயத்தோடு வாழ வழி சமைக்கிறது. இதனை மையமாகக்கொண்டே காரைநகர் பிரதேசத்தில் பல ஆலயங்களை அமைத்து வழிபாடு செய்கின்றனர். பல சிறப்புக்களைக்கொண்ட காரைநகர்ப்பிரதேசத்து திக்கரையில் அருள்புரியும் முருகப்பெருமானை அனைவரும் வழிபாடு செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. அமைதியும் சாந்தியும் சமாதானமும் கிடைக்க முருகப்பெருமானை பிரார்த்தனை செய்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள்

## தீர்வு தந்து எம்மை ஆள திக்கரையில் தேரிலேறி வருக



ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி – முருகா
தேறுதலைத் தந்தே தேசநலன்காக்க தேரிலேறி வருக!
நாறு மாலையோடு நலிந்தவரைக்காக்க
நாலு திக்கும் தொழவே தேரிலேறி வருக!
வீறு கொண்ட சூரன் வெம்பகையை முடித்த
வேலைத் தாங்கி முருகா தேரிலேறி வருக!
தீர்வு தந்தெமது திருநாட்டைக் காக்க முருகா
சேதி கொண்டு திக்கரையில் தேரிலேறி வருக
தமிழ்வடிவாய் வந்துதித்த தலைவா தேரிலேறி வருக
தமிழ்க்குடியை காக்கின்ற இறைவா தேரிலேறி வருக
உமை என்றும் உளம் மறவா உயிரே தேரிலேறி வருக
ஓம் என்ற மந்திரத்தின் உணர்வே தேரிலேறி வருக
இமைத்திடுமுன் எம்கவலை தீர்க்க தேரிலேறி வருக
எழில் மயிலில் பறந்து வரும் வேலா தேரிலேறி வருக
தமிழ்க் கவிதை தனிற் பிறந்ததலைவா தேரிலேறி வருக
தனை வணங்கும் யாவருக்கும் அருள தேரிலேறி வருக

வர்ணனைக் கலாநிதி
மதுரகவி.காரை எம். பி. அருளானந்தன்.
(அகில இலங்கை சமாதானநீதிவான்.)
ஆசிரியர் ஸ்ரான்லிக்கல்லூரி

## அறங்காவலரின் வாழ்த்துரை



ஈழத்திருநாட்டின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்தில் காரைநகரின் கண்ணே விளங்கும் களபூமி திக்கரையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப் பெருமானின் அருட்டிறங்கள் பல. வேண்டுவார்வேண்டும் வரமீயும் திக்கரை முருகன் தன் திருத்தொண்டுக்குரிய அன்பர்களை அரவணைத்து காத்தருள்கின்றான். யாம் இருக்கப் பயமேன் என்றவாறு தன்னைச் சரணடைந்து வழிபடுவர்களுக்கு என்றும் அபயமளிப்பவன் திக்கரை முருகன்.

பெருமானின் சர்வதாரி வருஷத்துக்குரிய மஹோற்சவம் 23.06.2008 அன்று மிகச்சிறப்பாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறுகின்றன. இன்றைய தினம் தேர்த்திருவிழா எம்பெருமான் அழகிய திருத்தேரிலே பவனி வந்து திருவருள் பொழிந்து எல்லா நலங்களையும் அருள்கின்றான். திருத்தேரில் சண்முகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக வலம்வரும்காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.எல்லோருக்கும் முருகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டி விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

ஆலய அறங்காவலர்
கந்தையா - பொன்னம்பலம்.

## மகோற்சவ பிரதமகுருவின் ஆசிச் செய்தி



காரைநகர் களபூமி திக்கரை என்னும் திருப்பதியிலே எழுந்தருளி அருள்பாலித்து வரும் கலியுக வரதனாம் கந்தவேல் பெருமானின் சர்வதாரி வருஷ மகோற்சவம் ஆனி மாதத்திலே சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவ காலங்களிலும் சிறப்பு உற்சவம் ஆகிய தேர்உற்சவ தினத்திலும் அடியார்கள் ஆலயத்தில் முருகப்பெருமானின் பெருங்கருணைக்கு பாத்திரமாக அமைந்து வழிபட்டு உய்வு பெறுகின்றார்கள். வள்ளி தேவசேனாபதியாக முருகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வருகின்றார். பெருமானின் பேரருளை எல்லோரும் பெற்று வாழவும் நாட்டில் சாந்தி சமாதானம் கிடைக்கவும் முருகப் பெருமானை வேண்டி ஆசி வழங்கி பிரார்த்திக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"
வேதாகம சிவாகம வித்தியா பூசணம்
சிவஸ்ரீ பரம சண்முகராஜக்குருக்கள்
பிரதமகுரு
(பாலானை, கண்ணகி அம்மன்
தேவஸ்தானம் கோப்பாய்.)

## தேவஸ்தான குருவின் ஆசிச்செய்தி




எல்லாம் வல்ல கலியுகவரதனாம் திக்கரை முருகப்பெருமானுக்கு இவ்வருடம் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று முதலாவது பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அழித்தல் தொழிலை குறித்த இரதோற்சவம் இன்றாகும். அறிவு மயமான வேலவர் ஒளிப்பிழம்பாகி ஞான சொரூபராய் மாமரமாக நின்ற சூரபத்மனை ஞானவேலால் இரண்டாகப் பிளந்து சேவலும் மயிலுமாக அடக்கியது போல ஆன்மாக்களின் நான், எனது என்ற மாயையை அழித்து ஞான அறிவை வழங்கும் பொருட்டு முருகப்பெருமான் வள்ளி தேவசேனாபதியாக தேரில் ஆரோகணித்து வருகின்றார். இக்கண்கொள்ளாக் காட்சியை கண்ணுற்று முருகன் அடியார்கள் தேர்வடம் பிடித்து தமது பாவ வினைகளைப் போக்கி மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

இத்தருணத்தின் சண்முகப்பெருமானது கருணை எல்லா அடியவர்களுக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து",
என்றும் வேண்டும் இன்ப அன்பு
பிரம்ஸ்ரீ .கு. சரவணபவானந்த சர்மா
(தேவஸ்தான குரு)





தேர்விழா மலரமைப்பு
மதுரகவி. காரை.
எம்.பி.அருளானந்தன்

ராசா பான்சி
இல.153,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## திக்கரை முருகனின் திருத்தல அற்புத வரலாற்றுச் சிறப்பு

ஈழமணித்திருநாட்டின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்துக்கு அணித்தாயுள்ளது காரைநகர் எனும் சிவபூமி. துர்வாசமுனிவர் அகத்தியர் போன்றோர் தவம் செய்து வழிபட்ட ஈழத்து சிதம்பர தலத்தை தன்னகத்தே கொண்டு விளங்கும் சிறப்புடைய பதியின் தென்கிழக்குப் பகுதியில் "கார் வழங்க நெல் விளையும் களபூமியின் திக்கரை" எனும் குறிச்சியில் வயல் வெளியின் மருங்கில் கோவில் கொண்டருளியுள்ள முருகப்பெருமான் தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பெருங்கருணைத் தடங்கலாக விளங்குகின்றான்.

பல தசாப்தங்களுக்கு முன் வயல்மேட்டில் வேலாயுதமாக தோன்றியவன். அன்பர்கள் சிலருக்கு அருட்பேற்றை வழங்கினான். இராமுடையார் பரம்பரையினரால் ஆதரிக்கப்பட்ட முருகப்பெருமான் அப்பரம்பரையில் உதித்த காசிநாதர் என்னும் பெரியாருக்கு திடீரென ஒருநாள் கண்ணொளி மறைந்து விட்டது. இப்பெரியார் கண் பார்வை பெற வைத்தியம் எதுவும் செய்யாது முருகப்பெருமானை வேண்டி பல விரதங்களை மேற்கொண்டு வருகையில் மீண்டும் கண்ணொளி கிடைத்தது. கண்ணொளி பெற்ற அன்பர் கந்தவேளுக்கு கற்கோவில் அமைக்க விரும்பி வயல் மேட்டிலிருந்து வேலாயுதத்தை இப்பொழுது விளங்கும் கோயில் உள்ள இடத்தில் சிறுமடாலயம் அமைத்து வேல் பிரதிஷ்டை செய்து கிரமமாக பூசை, கந்தபுராணப் படிப்பு முதலியவற்றை செய்வித்து வந்தார்.

சிறுமடாலயமாக இருந்த ஆலயம் 1962இல் கற்கோவிலாக அமைக்கப்பட்டு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து 1928 ,1974,1990 ஆண்டுகளில் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. 1975 ஆம் ஆண்டு ஆலயத்தில் சண்முகப் பெருமான் பிரதிஷ்டையும் இடம்பெற்றது. 1928 ஆம் ஆண்டு ஆலயத்தில் மகோற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இற்றைக்கு 18 ஆண்டுகளுக்குப் பின்னர் 2008 தை திங்கள் 27 ஆம் நாளன்று ஆலயத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்திற்கான கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவ்வாண்டுக்கான பிரமோற்சவ பெருவிழா ஆனித்திங்கள் 9ஆம் நாள் (23.06.2008) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இவ் கொடியேற்ற விழாவில் ஈழத்தின் பல சிவாச்சாரிய, பெருமக்கள் கலந்து வேதமோதி மங்களகரமாக விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.ஏனைய மகோற்சவங்களும் சிறப்பாக நடைபெற்று இன்று (2008.07.01) 9ஆம் திருவிழாவாகிய தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

தேரேறி அருள்பாலிக்கும் வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகப் பெருமானின் அருள்நலம் எங்கும் பெருகி மண்ணிலே எல்லோரும் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திப்போமாக.

அறங்காவலர் சிதம்பரப்பிள்ளை - கந்தையா பொன்னம்பலம்

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை



தீதகன்று உலகு உய்ய உதித்த முருகவேள் பெருமானுக்கு பெருமை தரும் திருத்தலங்களில் காரைநகர் திக்கரை முருகன் கோவிலும் சிறப்புக்குரியது. அருட்சிறப்பு மிக்க ஆறுமுகப் பெருமான் அருள் மழை பொழியும் திருக்கோவில் திக்கரையான் திருக்கோவில். வலம் வந்து வாசலில் நின்று முருகா என உரைப்பவர்க்கெல்லாம் அஞ்சேல் என்று ஆறுதல் செய்யும் அப்பன் குடி கொண்ட பெரும்பதி. சைவச்சான்றோர் புராணப் பாரம்பரியம் காத்த புண்ணியபதி. தாகம் தீர்க்கும் தண்ணீர்ப்பந்தல்களும் அகம் குளிர அடியவர் பசியாற்றும் அன்னதானக் கொடையும் இத் திருத்தலத்தின் மேன்மை இலக்கணமாகும். புகழ் பூத்த ஆன்மீகப் பேரறிஞர்கள் காலம் காலமாக தெய்வீகப் பேருரைகள் ஆற்றிய பெருங்கோவில். சைவமாக நெறிமுறைகளையும் காரை திருவூர் பண்பாட்டின் பாரம்பரியமும் காத்த பழம்பெரும் திருக்கோயில் திருவிழாப் பொலிவோடு இம் மண்விடிய அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்திப் போம்.

செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்

## களபூமி – திக்கரை இந்து இளைஞர் மன்றத்தின் திருவருளுரை

ஈழத்திருநாட்டின் யாழ்ப்பாண மாவட்டத்திலே சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமமாக திகழ்வது காரைநகர் ஆகும். தமிழ்மொழியின் சிறப்பையும் சைவத்தின் பெருமையையும் நன்குணர்ந்த காரைநகர் மக்கள் ஆலய வளர்ச்சிக்காக தாம் ஈட்டிய பொருளின் பெரும்பகுதியைச் செலவிடும் தன்மை நிறைந்தவர்கள். காரைநகர் கிழக்குக் களபூமியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற கந்த வேல்பெருமானின் தலத்தைப் புனரமைத்து அழகிய கலைக்கோவிலாக்கி இருக்கின்றார்கள். அடியார்களுக்கு அருள்பாலிக்கும் குமரகோட்டமாக களபூமி முருகமூர்த்தி ஆலயம் மிளிர்கிறது.

அறப்பணியும் ஆன்மீகப்பணியும் விரிந்து இந்து இளைஞர்கள் புத்துணர்ச்சி பெறவேண்டும். தன்னலம் கருதாத பொதுப்பணித் தொண்டர்களாக சமூகத்துக்கு தொண்டாற்ற அவர்களுக்கு எல்லாம் வல்ல திக்கரை முருகப்பெருமானின் அருள்ஆசி பெருக வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

திரு.த.தியாகலிங்கம்
தலைவர், இந்து இளைஞர் மன்றம்

## போரோய்ந்து மண்ணில் புதுவாழ்வு மலர தேரேறி வருவாய் திக்கரை முருகா நாட்டில் சாந்தி சமாதானம் கிடைக்க தேரேறும் திக்கரை முருகனின் திருவருள் பெருக பிரார்த்திப்பவர்கள்

"கண்ணொளி ஈய்ந்த கலியுக வரதனே களபூமி திக்கரையில் தேரேறி வருக"
E.S பேரம்பலம் &சன்ஸ்
இல.50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

"திக்கரையில் தேரேறி வருபவனே தீர்வுக்கு வழிகாட்டு"
ஐங்கரன் களஞ்சியம்
இல.354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

"திக்கரை வேலனுக்கு அரோகரா"
யாழ் காலணியகம்
இல.11, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

"வேலுண்டு மயிலுண்டு பயமில்லை"
K.K கந்தையாபிள்ளை &சன்ஸ்
இல.318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாண்ம்.

"வேண்டுவார் வேண்டும் வரமீயும் வேலவனே தேரேறி வருக"
யாழ்ப்பாணம் ரேடேர்ஸ்
இல.108, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

"நாறு மாலையோடு நலிந்தவரைக் காக்க தேரேறி வருக"
ராசன் பான்சி
இல.65, 66 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

"சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது மேல்"
R.A.M.கொமினிகேசன்
இல.6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

"ஆறுமுகமான பொருளே அபயம் தந்து காக்க தேரேறி வருக"
S.V.முருகேசு
இல.154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ரூபா பன்முக வர்த்தக நிலையம்
இல.104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் 'சீரகம்'

சீர் அகம் ஸ்ரீ சீரகம். அகத்தை அதாவது நமது இரைப்பையை சீராக இயங்க வைக்கும் ஓர் முக்கியமான உணவு பொருள் சீரகம். காரச் சுவையுடைய சீரகம், ஜீரணத்தை தூண்டும் இயல்புடையது.மேலும் பலமருத்துவ குணங்கள் சீரகத்தில் நிறைந்துள்ளன. பித்த நோய்கள், வாந்தி, தலைச்சுற்றுல், மயக்கம்,அதிக உடற்சூடு, பசியின்மை இப்படி பல நோய்களுக்கு சீரகம் சிறந்த மருந்தாகிறது. பசியைத் தூண்டும் குணம் இதற்கு இருப்பதால் பல மருந்துகளில் சீரகம் ஒரு முக்கிய பொருளாக இடம்பெற்றிருக்கிறது.

இரண்டு தேக்கரண்டி சீரகத்தை நன்கு வறுத்து ஒரு டம்ளர் நீர் ஊற்றி கொதிக்க வைத்து, வடிகட்டி ஒரு தேக்கரண்டி தேன் கலந்து மாதவிடாய் காலங்களில் இளம் பெண்களுக்கு ஏற்படும். வயிற்று வலிக்கு கொடுக்க,வலி சிறிது நேரத்திலேயே குறைந்துவிடும். பசிமந்தம், மற்றும் உணவு ஜீரணமாகாமல் இருப்பவர்கள் சீரகம் கொதிக்க வைத்த நீரை அடிக்கடி இளம் சூட்டில் பருகிவர, பசி ஏற்பட்டு ஜீரணம் ஒழுங்காகும். உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் சீரகத் தண்ணீரை இளம் சூட்டுடன் உணவிற்கு பத்து நிமிடத்திற்கு முன்பும், உணவு உண்டு பத்து நிமிடத்திற்கு பின்பும் அருந்த, உணவு நன்கு ஜீரணமாகி, கொழுப்புகள் உடலில் தங்காமல் இருக்கும்.வெயில் காலத்தில் ஏற்படும் சிறுநீர் எரிச்சல் , நீர்க்கட்டு, நீர்க்கருக்கு போன்றவற்றிற்கு சீரகத் தண்ணீரை அருந்த, விரைவில் நிவாரணம் உண்டாகும்.

*சீரகம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் இயல்புடையது. இரத்த அழுத்த நோயாளிகள் தினம் ஒரு தேக்கரண்டி*



*சீரகம் சாப்பிட, இரத்த அழுத்தம் சீராகும்.*

சீரகம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் இயல்புடையது. இரத்த அழுத்த நோயாளிகள் தினம் ஒரு தேக்கரண்டி சீரகம் சாப்பிட, இரத்த அழுத்தம் சீராகும். பிரசவித்த பெண்களுக்கு இது மிக சிறந்த மருந்தாகிறது. சீரகத்தை வறுக்கும் பொழுது நறுமண எண்ணெய் வெளிவரும். அப்பொழுது நீர் ஊற்றி கொதிக்க வைத்து அந்த நீரைப் பருகும் பொழுது சீரகத்தின். பலன் அதிகரிக்கும். குழந்தை பெற்ற பெண்கள், இந்த சீரக நீரை பருக தாய்ப்பால் பெருகும். கருப்பை பலப்படும். குழந்தை பெற்றால் கருப்பையில் உண்டான அழற்சி நீங்கும். சீரகத்தில் இரும்புச் சத்தும், மக்னீசிய சத்தும் நிறைந்து உள்ளன. இரும்புச் சத்து அதிகம் உள்ளதால் பிராண வாயுவை நம் உடலில் உள்ள செல்களுக்கு அளித்து புத்துணர்ச்சியளிக்கின்றது. மேலும் ஈரலை நன்கு வேலை செய்யத் தூண்டி, நம் உடலில் உள்ள நஞ்சுகளை வெளியேற்றி உடலுக்கு புத்துணர்ச்சி அளிக்கின்றது.

**சீரகப் பொடி**

சீரகம் -100 கிராம்

எலுமிச்சம்பழம் -2

மிளகு -1 தேக்கரண்டி

உப்பு-தேவையான அளவு

**செய்முறை:** சீரகத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் கிளறி நிழலில் காயவைத்து உலர்த்தி நன்கு காய்ந்ததும்,பொடி செய்து கொள்ளவும். மிளகை வறுத்துப் பொடி செய்து சீரகப் பொடியுடன் உப்புக் கலந்து வைத்துக்கொள்ளவும். சூடான சாதத்துடன் சிறிது நெய் கலந்து சாப்பிட்டு வர உணவு, நன்கு ஜீரணமாகும். வறட்சி நீங்கும்.நோய்வாய்ப்பட்டு பத்திய உணவு உண்பவர்கள், அறுவை சிகிச்சை செய்து படுக்கையில் இருப்பவர்கள்,சீரகப் பொடி சாறுடன் பாசிப்பருப்பு கலந்த காய் கறிக் கூட்டு கலந்து சாப்பிட, உணவு நன்கு ஜீரணமாகி விரைவில் குணம் உண்டாகும்.

**சீரக ரசம்:**

சீரகம்- 1 தேக்கரண்டி

துவரம்பருப்பு- 1 தேக்கரண்டி

மிளகாய் வற்றல்-2

10 நிமிடம் நீரில் ஊறவைத்துக் கொள்ள வேண்டும்.

புளி-சுவைக்கேற்ப, கடுகு-1தேக்கரண்டி, நெய்-1 தேக்கரண்டி, கறிவேப்பிலை-கைப்பிடி அளவு, பெருங்காயப் பொடி -1/4 தேக்கரண்டி, உப்பு-தேவையான அளவு

***செய்முறை:*** புளியைக் கரைத்து ஒரு பாத்திரத்தில் கொதிக்கவைக்க வேண்டும். சீரகம், துவரம் பருப்பு, மிளகாய் வற்றல் அரைத்து கொதிக்கும் புளி நீரில் கலந்து,மிதமான தீயில் கொதிக்க வைத்து, உப்பு, பெருங்காயப் பொடி கலந்துகொள்ளவும். தாளிக்கும் கரண்டியில் நெய் ஊற்றி கடுகு,கறிவேப்பிலை தாளித்து இறக்கவும். மிக சுவையான ஜீரணத்தை தூண்டும் ரசம்,பிரசவித்த பெண்கள் சாப்பிட உணவு எளிதில் ஜீரணமாகும்.எண்ணெய் தேய்த்துக் குளித்த அன்று இந்த ரசம் சாப்பிடலாம் பத்திய சாப்பாட்டிற்கு உகந்த ரசம்.

# இருதயத்திற்கு வேலைச்சுமையை அதிகரிக்கும் காஃபீன்!

மனித உடலில் பரிணமித்துள்ள நரம்பு மண்டபத்தில் இலட்சக்கணக்கான இரத்த நாளங்கள் செயற்படுகின்றன. இவை இருதயத்தின் (Heart) தன்னிச்சையான இயக்கத்தின் மூலம் தொழிற்படுகின்றன என்பதை நாமறிவோம். நாளங்கள் அனைத்தும் நெகிழ்ச்சித் தன்மை (Flexible) உடையவை. இவற்றை விறைப்பாக வைக்கும் துரதிர்ஷ்டமான நிலைமை ஒரு கப் கோப்பியினால் முடிகின்றது என்பார்கள். கிரீஸ் நாட்டிலுள்ள எதென்ஸ் மருத்துவக் கல்லூரிஆராய்ச்சியாளர், மனிதனுடைய இயல்பான இரத்த அழுத்தத்தைக் கோப்பியில் கலந்துள்ள காஃபீன் எவ்வாறு பாதிக்கின்றது என்பதை ஆய்வுகள் மூலம் கண்டறிந்துள்ளனர்.கோப்பி பருகும் சிலருக்கு அவ்வப்போது உயர் இரத்த அழுத்தம் (Hypertension) உண்டாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இயல்பான இரத்த அழுத்தம் உடையவர்கள் சிலர் தினமும் இரண்டு அல்லது மூன்று கப் கோப்பி அருந்தினால் அவர்களது இரத்த அழுத்தம் தற்காலிகமாக உயர்வடைவதோடு இருதயத்திலிருந்து குருதியை வெளியேற்றும் பெருந்தமனி(aorta) அதிகமாக விறைப்படைகின்றது என்றும் ஆய்வாளர் தெளிவுபடுத்துகின்றனர். இவ்வாறு பெருத்தமனி விறைப்படைவதின் தார்ப்பரியம் என்னவென்பதை தெரிந்துகொள்ள மேற்கொண்டுஆய்வுகள் நடைபெறுகின்றன.

இது எந்த அளவிற்கு இருதயத்திற்கு வேலைச்சுமையை அதிகரிக்கின்றது என்பதையும் இரத்த அழுத்த நோயாளர் மருத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை (Consult) பெற்ற பின்னர் உணர்ந்துகொள்ள முடிகின்றது என்பது நிதர்சனமாகும். இவர்கள் காஃபீன் அருந்துவதை இயன்ற அளவு தவிர்க்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் மக்களில் கோப்பி அருந்தும் பழக்கம் எல்லாப் பிரிவினருடையேயும் ஊடுருவியுள்ளதையும் காணக் கூடியதாகவுள்ளது. காஃபீன் கெடுதல் அற்றது போன்ற ஒரு மயக்கத்தில் சமூகம் இன்று வாழ்கின்றது எனலாம். இதன் காரணமாக வர்த்தக சமூகம் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சுப்பர் மார்க்கெட்டில் திடீர் கோப்பியை (Instant Coffee) தயாரித்து விற்பனை செய்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இருதயத் துடிப்பு உயர்வடைதல், கல்லீரலுக்கு செல்லும் இரத்தோட்டம் குறைதல், கொலஸ்ட்ரோல் உயர்தல், இரும்புச் சத்து போன்ற கனிமங்கள் உடலால் உட்கவரப்படுதல் தடைப்படுதல் என்பன காஃபீன் பருகுவதால் ஏற்படும் தீமைகளாகும். பத்து மில்லி கிராம் காஃபீன் உட்கொள்வதினால் ஒரு மில்லி கிராம் கல்சியம்(Calcium) இழப்பு உண்டாகின்றது.

கோப்பி அருந்துவதினால் அப்போதைக்கு உற்சாகமாக இருப்பதாகத் தோன்றும். எனினும் காலப்போக்கில் அது உங்கள் காலை வாரிவிடும். அது இருதயக் கோளாறுகளுடன் தொடர்புடையதாக மட்டுமின்றி சிறுநீர்ப்பை புற்றுநோயுடனும் தொடர்புடையதாக இருக்கிறது என்பது யதார்த்தமாகும். காஃபீன், பிறபோதை மருந்துகளையும் ,மக்கள் தவிர்க்க வேண்டும். அப்போதுதான் நல்ல உடல் நலமும் , தேக ஆரோக்கியமும் ஏற்பட நிறைய வாய்ப்புக்கள் உண்டாகின்றது. இதனை மருத்துவ நிபுணர்கள் நீண்டகாலமாகப் பரிந்துரைத்தும் வருகின்றனர் , அதேவேளை பல்வேறு நோய்களுக்கும் நல்ல மருத்துவ கவனிப்பு , ஊட்டசத்துள்ள உணவு ,உகந்த மருந்துகள் ,தடுப்பு ஊசிகள் உபயோகிப்பதினால் அவற்றின் வேகம் குறைவடைந்து வருகின்றன.




# பருத்தித்துறை கல்விக்கோட்ட தமிழ் தினப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

**வாசிப்பு** *பிரிவு1*

ஸ்ரீ.துளசியன் -பருத்தித்துறைசித்தி விநாயகர் வித்தி., பு.யசோதா-மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி,சி.சிந்துஜா-திக்கம் சித்தி விநாயகர் வித்தி.

*பிரிவு 2*

வி.கோபிகா- கெருடாவில் இ.த.க.பாடசாலை, ந.கௌதமி-சிதம்பராக் கல்லூரி,கா. கிருஷாளினி - தும்பளை சிவப்பிரகாச வித்தி.,

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

(கதைகூறல்)

சு.சுகந்தன் -தம்பசிட்டி ம்.மி.த.க. பாடசாலை, சா.சாருஜன்-புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை, ச.சுகிர்தன் -தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை,

**ஆக்கம் -எழுத்து**

சி. லம்போதரன்-தம்மசிட்டி மெ. மி.த.கபாடசாலை, ச. மதுசுஜாகெருடாவில் இ.த. கபாடசாலை: கு. மாதுமை -மேலைப்புலோலி சைவபிரகாச வித்தியாலயம்

**பேச்சு** *பிரிவு 1*

இ. லோஜிதன்- தம்பசிட்டி மெ.மி.த.க பாடசாலை , சி. அன்ரன் சியோசன் -கலட்டி றோ.க. த.க. பாடசாலை, ந. தினேஷ்ராஜ்- சிதம்பராக் கல்லூரி.

*பிரிவு 2*

க. பிரசாந்தி- மெதடிஸ்த பெ. உ. த. பாடசாலை, மு. பாவலன்- ஹாட்லிக் கல்லூரி, ர. சுரேக்கா- வடஇந்து மகளிர்கல்லூரி.

*பிரிவு 3*

த. கோகுலன்- ஹாட்லிக்கல்லூரி, மு. தமிழரசன்-கொற்றாவத்தை அ.மி.த. க.பாடசாலை,இ. நிதர்சினி- தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்.

*பிரிவு 4*

க. யாழினி -வட இந்துமகளிர் கல்லூரி, வ.சுஜீவன்-ஹாட்லிக் கல்லூரி, ச. கார்த்திகாயினி -மெதடிஸ்த பெ. உ. த .பாடசாலை.

*பிரிவு 5*

க.சிவசுதன் -ஹாட்லிக்கல்லூரி, பா. மதுரா- மெதடிஸ்த பெண்கள் உ.பா., பா. சுமன்- சிதம்பராக்கல்லூரி

**பாவோதல்** *பிரிவு1*

வ. மாதுமை -வட.இந்துமகளிர் கல்லூரி, வி. உதயநிலா -பொலிகண்டி இ. த.க பாடசாலை ,சி. கோசலா- திக்கம் சித்திவிநாயக வித்தியாலயம்.

*பிரிவு 2*

இ. ஜலனி- மெதடிஸ்த பெ. உ: த பாடசாலை, ர. சுரேக்கா- வடஇந்து மகளிர் கல்லூரி, இ.சுபாசினி -வல்வை சிவகுரு வித்தியாலயம்.

*பிரிவு 3*

ர. கீர்த்தனன்- தொண்டைமனாறு வீ. ம.வித்தியாலயம், சோ.வைதேகி- வட இந்து மகளிர் கல்லூரி, கி.மேரிநிஸாந்தினி- பொலிகண்டி இ. த. க. பாடசாலை.

*பிரிவு 4*

பொ. ஜெயகௌரி -வட இந்து மகளிர் கல்லூரி , அ. ராஜினி - பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி, ர. ரவிந்திரராணி, அ. ராஜினி- தொண்டைமானாறு வீ. ம வித்தியாலயம்.

*பிரிவு 5*

அ. மதுரா -வட இந்து மகளிர் கல்லூரி, பொ . விஜிதா- மெதடிஸ்த பெண்கள் உ. பாடசாலை, க. ஜெயராதை -தொண்டைமானாறு வீ . பி. ம. வி

**இசையும் அசைவும்**

ச. அமிலா -கெருடாவில் இ.த.க பாடசாலை, தனுஜா- வல்வை சிவகுரு வித்தி, வி. திருமகள் -பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.

**நடனம் தனி** *பிரிவு 1*

அ. நிவேதிகா- தொண்டைமானாறு வீ. பி .மகா வித்தியாலயம்.

*பிரிவு 3*

க.கிருசாயினி- வடஇந்து மகளிர் கல்லூரி, க. ஆர்த்திகா- மெதடிஸ்த பெ. உ. த.பாடசாலை.

*பிரிவு 5*

வி. கார்த்திகா- வட இந்து மகளிர் கல்லூரி, கி. கௌதமி- மெதடிஸ்த பெண்கள் உ. பா.

**கட்டுரை வரைதல்** *பிரிவு 2*

க. கருணரூபன் -சிதம்பராக்கல்லூரி, கோ.மயூரி- மெதடிஸ்த பெ. உ. த.பாடசாலை, இ. அஜந்- ஹாட்லிக்கல்லூரி.

*பிரிவு 3*

தி . சஜித்திரா- மெ.பெ.உ.த பாடசாலை, அ. சுபேதன்- ஹாட்லிக் கல்லூரி, தி. கஜரூபனா- சிதம்பராக்கல்லூரி.

**கட்டுரை வரைதல் இலக்கியம்**

**நயத்தல்**

*பிரிவு 4*

ர. கார்த்திகா -பொலிகண்டி இ. த. க பாடசாலை, சி. அநுரதன்-ஹாட்லிக்கல்லூரி , சி. சிவநந்தினி -மெதடிஸ்த பெ. உ. த.பாடசாலை.

**இசை தனி** *பிரிவு 2*

எ. அஜித்ர்ராஜ் -ஹாட்லிக் கல்லூரி, அ. லக்ஷாஜினி- பொலிகண்டி இ.த.க. பாடசாலை, இ. சிவதீபன் கற்கோவளம் மெ. மி. த. க பாடசாலை.

*பிரிவு 3*

சி. நிதர்சன்- ஹாட்லிக்கல்லூரி, கு.சுகீர்த்தனா -வட இந்து மகளிர் கல்லூரி, கு. சுஜிதா- மெதடிஸ்த பெ. உ. த பாடசாலை.

*பிரிவு 4*

ச. கபாஸ்கர் -ஹாட்லிக்கல்லூரி, மி .மேரி உதயா- பொலிகண்டி இ. த.க . பாடசாலை, வா. சரண்யா- மெதடிஸ்த பெ.உ. பாடசாலை.

*பிரிவு 5*

செ. செல்வரஜிவன் ஹாட்லிக்கல்லூரி

**இலக்கணப்போட்டி**

*பிரிவு 4*

சு.அனுஷா -வட இந்து மகளிர் கல்லூரி, செ.சாருண்ஜா- மெதடிஸ்த பெ.உ.த.பாட., தே.பாமினி- கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.

*பிரிவு 5*

பா.யாழினி- வட இந்து மகளிர் கல்லூரி,தே.ஜெனனி- மெதடிஸ்த பெ.உ.த .பாடசாலை, ரா.இருதயநாதன்-புற்றளை ம.வி. (தொடரும்)

## 44 ஆண்டுகளின் பின்னர்

# ஸ்பெயின் 'யூரோ' சம்பியன்; ஜேர்மனியின் கனவு தகர்ந்தது

(வியன்னா)

யூரோ கோப்பையை ஸ்பெயின் அணி தட்டிச் சென்றது. நேற்று முன்தினம் நடந்த பரபரப்பான இறுதிப் போட்டியில் பெர்னாண்டோ டோரஸ் அருமையாக கோல்அடிக்க ஜேர்மனியை 1:0 என்ற கணக்கில் வீழ்த்தியது.

இதன் மூலம் 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்பெயின் அணி யூரோ கோப்பையை கைப்பற்றியது.

மூன்று முறை சம்பியனான ஜேர்மனி இம்முறை இரண்டாம் இடத்துடன் ஆறுதலடைந்தது.

ஐரோப்பிய அணிகள் மோதிய யூரோ கோப்பை கால்பந்து தொடர் சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியாவில் நடந்தது.

**முதல் நிமிடத்தில் இருந்தே பரபரப்பு**

ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் நடந்த இறுதிப்போட்டியில் ஜேர்மனி, ஸ்பெயின் அணிகள் மோதின. போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக நிறைவு விழா நடந்தது. பல வண்ணத்தில் பலூன்கள் பறக்கவிடப்பட்டன.

என்ரிக் இக்லிசியாஸ் உற்சாகமாகப் பாட, கலைஞர்கள் பல்வேறு சாகசங்களை நிகழ்த்திக் காட்டினர். பின்னர் ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த இறுதிப்போட்டி ஆரம்பமானது.

கால் பகுதியில் காயமடைந்தபோதும் ஜேர்மனி அணித்தலைவர் மைக்கல் பல்லாக் பங்கேற்றார்.

ஸ்பெயின் அணியில் காயம் காரணமாக ஹட்ரிக் டேவிற் வில்லா நீக்கப்பட்டு பாப்ரிகாஸ் வாய்ப்பு பெற்றார்.

கிப்-ஆப் விசில் ஊதியமுதல் நிமிடத்தில் இருந்தே பரபரப்பு எகிறியது.

**அல்வா கொடுத்த டோரஸ்**

ஜேர்மனி,ஸ்பெயின் வீரர்கள் ஆக்ரோஷமாக ஆடினர். ஆட்டத்தின்23-வது நிமிடத்தில் ஸ்பெயின்அணியின் பெர்னாண்டோ டோரஸ் தலையால் முட்டி அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு பறந்தது.

மறுபக்கம் ஜேர்மனி வீரர்கள் பந்தை அழகாக பாஸ் செய்தபோதும் பினிஷிங் இல்லாததால் பல வாய்ப்புக்களை வீணடித்தனர்.



ஆட்டத்தின்33-வது நிமிடத்தில் அந்த அதிசயம் அரங்கேறியது. ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டோரஸ் பந்தோடு மின்னல் வேகத்தில் பறந்து வந்தார். இவரை பெனால்டி ஏரியாவில் வைத்து ஜேர்மனியின் பிலிப்லாம் மடக்கப் பார்த்தார்.

இவருக்கு அல்வா கொடுத்த டோரஸ் இன்னும் வேகமாக முன்னேறினார். உடனே ஜேர்மனி கோல் காப்பாளர் ஜென்ஸ் லேமன் படுத்து தடுக்கப்பார்த்தார்.

இவருக்கும் தண்ணி காட்டிய டோரஸ் 'அழகாக கோல் அடிக்க ஸ்பெயின் 1:0 என்று முன்னிலை பெற்றது.

இதற்கு பதிலடிகொடுக்க ஜேர்மனி அணி கடுமையாகப்போராடியது. ஆனாலும் ஸ்பெயின் தற்காப்பு பகுதி இரும்புக் கோட்டையாக இருக்க அவ்வளவு எளிதாக தகர்க்க முடியவில்லை.

ஜேர்மனி அணித்தலைவர் மைக்கல் பல்லாக் நெற்றியில் காயம் பட்டு இரத்தம் வழிய சிறிது நேரம் சிகிச்சை எடுத்துக் கொண்டார். முதல் பாதி முடிபில் ஸ்பெயின் 1:0 என்ற முன்னிலையை தக்க வைத்துக் கொண்டது.

**முரட்டு ஆட்டம்**

இரண்டாவது பாதி ஆரம்பமாகியதும் ஜேர்மனி அதிரடியாக ஆடியது. அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியது. பல்லாக் இருமுறை வாய்ப்புக்களை வீணாக்கினர்.

இதேபோல் பொடோல்கியின் முயற்சியும் வீணானது. மிரோஸ்வோவ் குளோசும் காயமடைய சிக்கல் ஏற்பட்டது. அதிர்ஷ்டம் கை கொடுக்காத நிலையில் ஜேர்மனி வீரர்கள் முரட்டு ஆட்டம் ஆடினார்கள்.

இதற்கு ஸ்பெயின் வீரர்களும் பதிலடி கொடுக்க போட்டியில் என்ன நடக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

64-வது நிமிடத்தில் ஜேர்மனியின் பொடோல்ஸ்கி, ஸ்பெயினின் சில்வா நேருக்கு நேர் தலையால் முட்டிக் கொண்டனர்.

இதில் பொடோல்ஸ்கியின் நெற்றியில் சில்வா பலமாக மோதினார். இதையடுத்து சில்வாவை சிவப்பு அட்டை காட்டி வெளியேற்ற வேண்மென ஜேர்மனி வீரர்கள் கோரினர்.

இதனை நடுவர் ஏற்கவில்லை. கடைசி வரை துடிப்பாக ஆடிய ஸ்பெயின் அணி ஜேர்மனியை 1:0 என்ற கணக்கில் வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது. (5)

## வில்லாவுக்கு 'தங்க காலணி'

யூரோ கோப்பை கால்பந்தாட்டத் தொடரில் அதிக கோல் அடித்தவர் டேவிட் வில்லா. ஸ்பெயினைச் சேர்ந்த அவர் 4 கோல் அடித்தார். இதில் ரஷியாவுக்கு எதிராக ஹட்ரிக் (தொடர்ந்து 3 கோல்) சாதனை புரிந்து இருந்தார். 4 கோல்கள் அடித்த டேவிட் வில்லாவுக்கு தங்க காலணி வழங்கப்பட்டது.

**ஸ்பெயின் நாட்டில் கோலாகலம்**

44 ஆண்டுகளுக்கு பின்னர் யூரோ கோப்பையை வென்றதால் ஸ்பெயின் நாட்டில் வெற்றியை மக்கள் கோலாகலமாக கொண்டாடினார்கள். இரவு முழுக்க நடனமாடி வெற்றியை பகிர்ந்து கொண்டனர். ஸ்பெயின் முழுக்க விழாக்கோலம் பூண்டுள்ளது. (5)

## முரளிதரனின் மாஜாயால சுழலில் பங்களாதேஷ் அணி வீழ்ந்தது

### சனத் ஜெயசூர்யா, சங்கக்கார அபார சதம்

(கராச்சி)

சனத் ஜெயசூர்யா, குமார் சங்கக்காரவின் சிறப்பான சதம் மற்றும் முரளிதரனின் மாஜாயால சுழலின் மூலம் இலங்கை அணி 158 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி சுப்பர் 4 ஆட்டத்தில் 2 வெற்றியை பதிவு செய்து 4 புள்ளிகளுடன் முன்னிலை பெற்றது.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று கராச்சியில் நடைபெற்ற சுப்பர் 4 ஆட்டத்தில் இலங்கை -பங்களாதேஷ் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூர்யா,சங்கக்காரவின் 220 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 332 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நேற்று தனது 39-வது பிறந்த தினத்தில் அதிரடிநாயகன் சனத் ஜெயசூர்யா 88 பந்துகளில் (16 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 130 ஓட்டங்களை எடுத்து ஒருநாள் போட்டி யில் சதம் பெறும் 2-வது முதுமையான வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குமார் சங்கக்கார 128 பந்துகளில் (16 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 121 ஓட்டங்களையும் எடுத்தனர்.




பந்துவீச்சில் ரீஷா,அலோக் கபாலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 333 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முரளிதரனின் துல்லியமான சுழலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 38.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 158 ஓட்டங்கள் வித்தியாசத் தில் தோல்வி அடைந்தது. இதில் ரகீபுல் ஹஸன் 52 ஓட்டங்களையும் நஷிமுடின் 47 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில்முத்தையா முரளிதரன் 5 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ் 2 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக இலங்கை அணியில் வெற்றிக்கு வழியமைத்த ஜெயசூர்யா தெரிவானார். (5)

## வோட்சன் சதம்; ஆஸி. வெற்றி

### மேற்கிந்தியத் தீவுகள் சோகம் தொடர்கிறது

(சென்ரீஜார்ஜ்)

வோட்சனின் சதத்தின் மூலம் 3-வது ஒருநாள் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரை தனதாக்கியது.

சொந்த மண்ணில் மேற்கிந்தியத் தீவுகளின் சோகம் தொடர்கிறது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் மற்றும் ஒரு இருபது -20 போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் சுவீகரித்ததுடன் இருபது -20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்றுவரும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள்தொடரில் முதல் 2 போட்டிகளில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு தீர்க்கமான மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் சென்ரீஜார்ஜில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைதேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் ஹைறல் 53 ஓட்டங்களையும் மார்ஷல் 35, சர்வான் 31 மற்றும் சந்தர்போல் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரக்கன் 3 விக்கெட்டுக்களையும் சைமண்ட்ஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 224 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வோட்சனின் சிறப்பான சதத்தின் மூலம் 40.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 227 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சேன் வோட்சன் 122 பந்துகளில் (15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 126 ஓட்டங்களை எடுத்து ஒருநாள் போட்டிகளில் தனது முதலாவது சதத்தை பூர்த்தி செய்தார்.

அத்துடன் அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 69 ஓட்டங்களையும் எடுத்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த வோட்சன் தெரிவானார். (5)

# ஷெல் காஸின் விலை அதிகரிப்பு லாப் காஸின் விலை குறைப்பு

சமையல் எரிவாயுவின் விலையை ஷெல் காஸ் நிறுவனம் அதிகரித்துள்ள அதேநேரம் லாப் காஸ் நிறுவனம் குறைத்துள்ளது.

லாப் எரிவாயு நிறுவனம் 12.5 கிலோக் கிராம் எடையுள்ள சிலிண்டர் ஒன்றின் விலை யினை 53 ரூபாயினால் குறைத்துள்ளது. இதன் அடிப்படையில் 12.5 கிலோக்கிராம் எடையுடைய லாப் சிலிண்டர் ஒன்று நேற்று நள்ளிரவு முதல் ஆயிரத்து 668 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படும் என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் ஷெல் எரிவாயு நிறுவனம் 12.5 கிலோக்கிராம் எடையுடைய சிலிண்டர் ஒன்றின் விலையினை நேற்று நள்ளிரவு முதல் 8 ரூபாயினால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 12.5 கிலோக்கிராம் எடையுடைய ஷெல் சிலிண்டர் ஒன்று நேற்று முதல் ஆயிரத்து 737 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படும் என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயுவின் விலைத் திருத்தம் குறித்து நேற்று மாலை இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் றூமி மர்சூக் தெரிவித்திருந்த நிலையில் இந்த விலைத் திருத்தங்கள் குறித்து இந் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

ஷெல் எரிவாயு நிறுவனம் 12.5 கிலோக் கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலையை மேலும் 324 ரூபாயினால் அதிகரிக்க நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையிடம் அனுமதி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஹிக்கடுவ...

காயமடைந்தவர்கள் கராப்பிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தண்டவாளத்தில் ஏற்பட்ட கோளாறுக்கான காரணம் குறித்துக் ஹிக்கடுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-5)

## யாழ்...

நேற்றைய போராட்டம் தொடர்பாக வேலையற்ற பட்டதாரிகள் தெரிவித்துள்ளதாவது,

சகல பட்டதாரிகளும் பல்கலைக்கழகத்திலிருந்தே வெளியேறியவர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்குப் போட்டிப் பரீட்சைகளை வைப்பது தவறு.

கடந்த காலங்களில் பட்டச் சான்றிதழ் வழங்கப்படாத நிலையிலும் பட்டதாரிகளுக்கு நியமனங்களும் வழங்கப்பட்டன. ஆனால் நாம் பட்டச் சான்றிதழைப் பெற்று நீண்ட காலமாகியும் இன்னமும் வேலை வழங்கப்படவில்லை.

எமக்கு உரிய மேலதிகாரிகளின் உறுதிமொழி கிடைக்காத பட்சத்தில் நாளை முதல் (இன்று) உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்போம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகளும் தமது போட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-4,5)

## வடக்கு...

ஜனாதிபதியைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

2006 ஆம் ஆண்டு பொலிஸ் மாஅதிபராகப் பதவியேற்ற விக்டர் பெரேரா நேற்றுடன் ஓய்வுபெற்றார். இந் நிலையில் அவருக்கு வடக்கின் ஆளுநர் பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வவுனியாவில் நேற்று...

அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரிடம் முறையிட்டுள்ளார்கள்.

வவுனியா பிரதேசத்தின் பாதுகாப்புக்காகவே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கைதுகள் தொடர்பாக வவுனியாப் பொலிஸாருடன் தாங்கள் தொடர்பு கொண்டதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர், 60 ற்கும் மேற்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தங்களிடம் பொலிஸார் தெரிவித்ததாகக் கூறினர்.

தடுத்து வைக்கப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்படுவார் எனவும் பொலிஸார் தெரிவித்ததாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்தத் திடீர் நடவடிக்கை காரணமாக நகரிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கைது செய்யப்பட்டவர்களைப் பார்ப்பதற்காகப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற போதிலும் அவர்களுக்குப் பொலிஸார் அனுமதி வழங்கவில்லை என்றும் காலையில் வந்து பார்க்குமாறு கூறி அவர்களைத் திருப்பியனுப்பி விட்டதாகவும் உறவினர்கள் பலர் தெரிவித்தனர். (ச-5)

# நாட்டில் வாழும் சகல மக்களும் எந்தப் பகுதிக்கும் போய் வரலாம்

## பிரதம நீதியரசர் உரை

(கொழும்பு)

இந்த நாட்டில் பெரும்பான்மைச் சமூகங்களுக்கு இருக்கும் உரிமை ஏனைய சிறுபான்மைச் சமூகங்களுக்கும் சமமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கும் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, எந்தவொரு இனமும் இன்னொரு இனத்துக்கு அடிமைப்பட்டு வாழ அனுமதிக்க முடியாதெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இங்கு வாழும் முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுக்கு நல்ல முன்மாதிரியாகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 58-வது வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொழும்பு மகாவலி நிலைய கேட்போர் கூடத்தில் பேரவையின் தலைவர் எம்.எஸ். ரஹீம் தலைமையில் இந்த மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாடு முழுவதிலுமிருந்து வை.எம்.எம்.ஏ. கிளைகளின் பேராளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்ட இந்த வருடாந்த மாநாட்டில் பிரதம நீதியரசர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் சமமான உரிமைகளேயுள்ளன. இதில் உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ கவனிக்க முடியாது. பெரும்பான்மை சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் அதே அளவு சமமான சிறுபான்மைச் சமூகங்களுக்கும் உண்டு. அதனை எவரும் மறுக்க முடியாது. எவரது உரிமையையும் பறிக்கவும் முடியாது.

இந்த நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் எவரும் எங்கும் வாழலாம். நாட்டின் எந்தப் பகுதிக்கும் போய் வரலாம். அந்தச் சுதந்திரம் மறுக்கப்பட முடியாது. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் மீண்டும் அவர்களது வாழ்விடங்களுக்குச் செல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமது இருப்பிடங்களில் அவர்கள் குடியமர்த்தப்பட வேண்டும். இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் ஏனைய இன மக்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்கின்றனர்.

சிங்கள சமூகத்தோடும் தமிழ்ச் சமூகத்தோடும் ஒற்றுமையாக புரிந்துணர்வோடும் வாழ விரும்புவர்கள் முஸ்லிம்கள். இந்த முன்மாதிரியை ஏனைய இனத்தவர்களும் பின்பற்ற வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் புரிந்துணர்வோடு வாழ முற்பட்டால் மட்டுமே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைபெற முடியும். (ச-5)

## திணைக்களத்...

பயண அனுமதியைப் பெற அரச அதிபரூடாக இரு வாரங்களுக்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு விண்ணப்பிக்கும்போது வெளிமாவட்டத்திற்குச் செல்லும் காரணம், பிறமாவட்டத்தில் தங்கவுள்ள முகவரிக்கு உரியவரின் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வைக்க வேண்டும் என அரச அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# கண்ணீர் காணிக்கைகள்



## நாகலிங்கம் நந்தகுமார்

### (உதவி அரசாங்க அதிபர், துனுக்காய்)

இடி இறங்கியதால் அதிர்ந்தது உள்ளம்.  
இப்போதும் நினைவு  
கனத்துக் கிடக்கிறது.  
உனக்கா இப்படி......?  
எப்போதும் புன்னகையும்,  
ஆர்ப்பாட்டமில்லாத அறிவும், ஆளுமையும்,  
நட்புக்கு நாகரிகம் வகுத்த மனிதநேயமும்  
அதற்குள் அழிந்து போனதா?  
பிறந்த மண்ணின் சேவையே மூச்சாய்...  
சமூக சேவை உத்தியோகத்தனாயிருந்து AGA ஆனபின்னும்  
வாழ்ந்தவன் நீ ! வென்றவன் நீ !  
உனக்காக காத்துக் கிடந்த பணிகள் ஏராளம்...  
அவற்றைக் காக்க வைத்து  
பாதிவழியில் பறந்தது ஏனோ?  
உன் நினைவுகளை மீட்டிப் பார்க்கப் பார்க்க  
சோகக் கடலில் அமிழ்ந்து தவிக்கிறது மனது.  
உன் மறைவை சீரணிக்க முடியாமல்  
இறுதியாய் உன்னை வழியனுப்பக்  
கொடுத்தும் வைக்காமல்  
ஈர விழிகளுடன் நாங்கள்

நாகலிங்கம் நந்தகுமார் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(1416)

**இலங்கை நிர்வாக சேவை (2003) நண்பர்கள்.**

# புலிகளின் மரபு வழிப் போர்த் திறனை...

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற வெளிநாட்டு ஊடகவியலாளர் சங்க உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

விடுதலைப்புலிகள் இன்னமும் எமது படைகளுடன் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் முன்பிருந்த எதிர்ப்பு தற்போது அவர்களிடமில்லை. அவ்வாறான எதிர்த்தாக்குதலில் ஈடுபடவல்ல திறன் இனிமேல் அவர்களுக்கு இருக்காது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் வலு தற்போது மிக மோசமான பலவீன நிலையை அடைந்துள்ள போதும் அவர்களை இராணுவ ரீதியில் முற்றாகத் தோற்கடிப்பதற்கு இன்னும் ஒரு வருடம் எடுக்கும்.

2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம்முதல் இடம்பெற்ற தாக்குதல்களில் சுமார் 9 ஆயிரம் பேருக்குக் குறைவில்லாத விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

எமது படைகள் தற்போது வெறுமனே நிலப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதோடு நின்றுவிடாமல் புலிகளை இராணுவ ரீதியில் முற்றாக அழிக்கும் பரந்த திட்டத்துடன் நடவ டிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுதான் முன்னைய காலங்களில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கும் தற்போதைய நடவடிக்கைக்கும் இடையிலான வித்தியாச மாகவுள்ளது.

இலக்கை அடையும் வரை நாம் மேற்கொள்ள வேண்டிய எமது இந்த நடவடிக் கைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருந்தும் அவர் தலைமையிலான அரசிடமிருந்தும் சரியான நெறிப்படுத்தல்களையும் தலைமைத்துவத்தையும் பெற்றுள்ளோம்.

வடக்குப் போரில் பல நூற்றுக் கணக்கான கிலோமீற்றர்கள் சதுர பரப்பளவு கொண்ட நிலப் பிரதேசங்கள் விடுதலைப்புலிகளிடமிருந்து எமது படைகளால் கைப்பற்றப்பட்டுள் என.

தற்போதைய நிலையில் கடற்புலிகளின் பிரதான தளம்அமைந்துள்ள விடத்தல் தீவிலிருந்து 4 கிலோமீற்றர் தொலைவிலேயே எமதுபடைகள்நிலைகொண்டுள்ளன.

விடுதலைப்புலிகள் தமது தற்போதைய தாக்குதல் வலுவையும் இன்னும் ஒரு வருட காலப் பகுதிக்குள் முற்று முழுதாக இழந்து தமது கடைசித் தந்திரோபாயத்தை நாட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்றார் அவர். (ச-5)

# கண்ணீர் அஞ்சலி

**ஊரெழு மேற்கைச் சேர்ந்த எமது அன்புத் தோழி அனுலாவின் பாசமிகு தந்தை**

## செல்லையா செல்வராஜா

**அவர்கள் அகால மரணமான செய்தி அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆன்மா இறைவனடி சேர அகில உலக இரட்சகனைப் பிரார்த்திக்கின்றோம்.**

HNDA 2 ஆம் வருட  
மாணவர்கள் (Day)

(1417)

## செட்டி...

மணியளவில் விமானப் படையின் ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

குறிப்பிட்ட இலக்கு வெற்றிகரமாகத் தாக்கியழிக்கப்பட்டதாகவும் சேதவிபரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை என்றும் விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## அமெரிக்...

பட்டகாலப்பகுதியில் பிற்போடப்பட்ட விசாக்கள் மற்றும் சந்திப்புக்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியிலான புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தூதரகம் அறிவித்துள்ளது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.